# பனை அபிவிருத்திச் சபை

# வருடாந்த அறிக்கை - 2011

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சு

## உள்ளடக்கம் பக்க இல.


**(அ) தோற்றப்பாடு செயற்பாடு**

- o எமது தூரநோக்கு 02
- o எமது குறிக்கோள். 02
- o தலைவரின் மீள் பார்வை 03
- o நிறைவேற்று முகாமைத்துவம் 04
- o கூட்டிணைக்கப்பட்ட தகவல்கள் 05
- o எமது நோக்கங்களும் இலக்குகளும் 06
- o பனைவளம் 07

**(ஆ) செயல்திறன் தந்திரோயாயம் மற்றும் இடர் முகாமைத்துவம் தொடர்பான பார்வை**

- o வியாபார நடைமுறைகளை அறிக்கையிடல் 08-15
- o செயற்பாட்டுப் பெறுபேறுகளின் மீளாய்வு 15
- o நிதியியல் மீளாய்வு 16
- o ஆபத்து முகாமைத்துவம் 16
- o உத்திகள் 17
- o மனித மூலதனம் 18
- o சூழலியல் அறிக்கை 18

**(இ) நிறுவன ஆளுகை**

- o பணிப்பாளர் சபை 18
- o பணிப்பாளர் சபைக்கூட்டங்கள் 18
- o கணக்காய்வு மற்றும் முகாமைக்குழு 19
- o உள்ளகக் கட்டுப்பாடு. 20
- o முகாமைத்துவம் 20
- o பிறவிடயங்கள் 20

**(ஈ) பணிப்பாளரின் அறிக்கை**

- o பொது 21
- o எதிர்கால அபிவிருத்திகள் 21
- o பணிப்பாளர்கள் 22

**(உ) நிதியியற் கூற்றுக்கள் - வெளிப்படுத்தல்கள்**

- o முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் 22-24
- o ஐந்தொகை 25
- o இலாப நட்டக்கணக்கு 26
- o நிதி நிலை மாற்றங்கள் பற்றிய கூற்று 27
- o நிதிச் செயற்பாடுகள் பற்றிய கூற்று 28
- o முதலீட்டு மாற்றங்கள் பற்றிய கூற்று 29
- o நிதி நிலை மாற்றங்கள் பற்றிய கூற்று 30
- o கணக்குகளுக்கான குறிப்புகள் 31-44

**(ஊ ) கணக்காய்வாளரின் அறிக்கை**

### பனை அபிவிருத்திச் சபை

பனை அபிவிருத்திச் சபையானது 1971ம் ஆண்டின் 46ம் இலக்க தெங்கு அபிவிருத்தி சட்டத் திருத்தம் மூலம் கொண்டுவரப்பட்ட 1975ம் ஆண்டின் 24ம் இலக்க சட்டத்தின் பிரகாரம் 18ம் திகதி ஆவணி மாத 1978ம் ஆண்டின் வர்த்தமானி அறிவித்தலின் மூலம் மேலதிக தோட்டப் பயிர்ச் செய்கை அமைச்சின் கீழ் பனைசார் தொழிற்பாடுகளை மேற்கொள்வதற்கென உருவாக்கப்பட்ட ஓர் அமைப்பாகும். 2010ம் ஆண்டின் வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் தற்போது பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் கீழ் செயற்பட்டு வருகின்றது.

### பனை அபிவிருத்திச் சபையின் பிரதான செயற்பாடுகளாவன:

- பனை நடுகையினை விரிவாக்கல்.
- தற்போதுள்ள மாதிரிப் பண்ணைகளை சீர் திருத்தலும் விரிவாக்கம் செய்தலும்.
- பனைசார் கைத்தொழில் பயிற்சிகளை நடாத்துதல்.
- பல்வேறு வகையான பனைசார் உற்பத்திப் பொருட்களை உற்பத்தி செய்தல்.
- பனைசார் உற்பத்திப் பொருட்களை மேம்படுத்துதல்.
- பனைசார் உணவு உற்பத்திகள் தொடர்பான ஆராய்ச்சிகளை மேற்கொள்ளல்.
- கற்பகம் விற்பனை நிலையங்கள் ஊடாக விற்பனை நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

## எமது தூரநோக்கு

வளங்களையும் சூழலையும் அழியாமல் அதே வேளையில் நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு அர்த்தம் மிகுந்த பங்களிப்பை கொடுக்கும் பனைப் பிரிவை அபிவிருத்தி செய்வது.

## எமது குறிக்கோள்

பனைக் கைத்தொழிலையும் பனை வளங்களையும் ஒழுங்குபடுத்தி அபிவிருத்தி செய்தலும் முன்னேற்றுதலும்.

# தலைவரின் மீள் பார்வை

கடந்த வருடம் பனை அபிவிருத்தி சபைக்கான ஒரு மைல் கல் ஆகும். நாம் எமது இலக்குகளையும் நோக்கங்களையும் அடைந்து கொள்ளும் பொருட்டு பல செயற்திட்டங்களை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தியுள்ளோம்.

கடந்த யுத்த காலகட்டத்தின்போது பெருமளவு பனைமரங்கள் அழிக்கப்பட்ட இடங்களில் தற்போது உன்னதமான நடுகைத் திட்டத்தின்மூலம் 603300 பனை விதைகள் நாட்டப்பட்டுள்ளன. இவ்விடயங்கள் தற்போது மீள் குடியேற்றம் செயற்பட்ட இடங்களாக உள்ளன.

நாம் மேலும் மிகுந்த சிரத்தையுடன் மகிந்த சிந்தனையின் அடிப்படையில் "**நெகனஹிர நவோதய**", "**வடக்கின் வசந்தம்**" முதலான வாழ்வாதார உட்கட்டுமான அபிவிருத்தி திட்டங்களில் ஈடுபட்டு வருகின்றோம். நாம் மேலும் குறிப்பிட விரும்புவது அரச சாரா்பற்ற நிறுவனங்களின் நிதிப் பங்களிப்பினை பல்வேறு அபிவிருத்தி திட்டங்களை நோக்கி நகர்த்த இயலுமாய் இருந்தது.

மேலும் நாம் பல பயிற்சிப் பட்டறைகள், கண்காட்சிகளில் பங்குபற்றியமை மற்றும் வவுனியா கற்பக நிலைய நடமாடும் விற்பனை சேவை முதலானவை எமது விற்பனைப் புரள்வு அதிகரிப்புக்கு ஏதுவாக அமைந்துள்ளன.

எமது இலக்குகளை அடைவதற்கு தமது பெறுமதி மிக்க பங்களிப்பினையும், ஒத்துழைப்பினையும் வழங்கிய எமது சபைப் பணியாளர்களுக்கு நான் மிகவும் கடமைப்பட்டுள்ளேன்.

இறுதியாக பணிப்பாளர்கள் எமது சபையின் உன்னத வளர்ச்சிக்கு அளித்த பெறுமதி மிக்க பங்களிப்புக்கு அவர்களுக்கும் எனது நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன்.

## நிறைவேற்று முகாமைத்துவம்

| பதவி | பெயர் |
|---|---|
| பொது முகாமையாளர் | திரு. எம். பி. லோகநாதன் |
| முகாமையாளர் (நிதி & நிர்வாகம்) | திரு. வி. பி. தேவராஜா |
| பதில் முகாமையாளர் (ஆராய்ச்சி & தரநிர்ணயம்) | திரு. எஸ். ஸ்ரீவிஜேந்திரன் |
| உதவி முகாமையாளர் (சந்தைப்படுத்தல் & உற்பத்தி) | திரு. ஜி. கே. வாஹலதந்திரி |
| உதவி முகாமையாளர் (நிர்வாகம் & மனிதவளம்) | திரு. பி. சுதாகரன் |
| உதவி முகாமையாளர் (அபிவிருத்தி) | திருமதி. எஸ். ஜனார்த்தனன் |
| உள்ளகக் கணக்காய்வாளர் | திரு. ஆர். ராமேஸ்வரன் |
| விரிவாக்கல் உத்தியோகத்தர் | திரு. கா. கோபாலகிருஸ்ணன். |

# கூட்டிணைக்கப்பட்ட தகவல்கள்

| | | |
|---|---|---|
| பெயர் | : | பனை அபிவிருத்திச் சபை. |
| சட்ட அந்தஸ்து | : | 1971ம் ஆண்டின் 46ம் இலக்க தெங்கு அபிவிருத்தி சட்டத் திருத்தம் மூலம் கொண்டுவரப்பட்ட 1975ம் ஆண்டின் 24ம் இலக்க சட்டத்தின் பிரகாரம். |
| ஆரம்பம் | : | 1978 |

| பதிவு செய்யப்பட்ட அலுவலகம் | | விலாசம் | | தொ. பேசி/நகல் |
|---|---|---|---|---|
| தலைமை அலுவலகம் | : | தேசிய வீடமைப்புச் செயலகம்<br>கண்டி வீதி, யாழ்ப்பாணம். | :<br>: | 0212222034<br>0212224154 |
| நகர அலுவலகம் | : | இல. 244, காலி வீதி,<br>கொழும்பு - 04. | :<br>: | 0112586820<br>0112553697 |

| பிராந்திய அலுவலகங்கள் | | விலாசம் | | தொ. பேசி/நகல் |
|---|---|---|---|---|
| மட்டக்களப்பு | : | பார் வீதி, மட்டக்களப்பு | : | 0655673800<br>0652223179 |
| திருகோணமலை | : | உட்துறைமுக வீதி,<br>திருகோணமலை. | <br>: | 0265675602<br>0262224039 |
| அம்பாறை | :<br>: | இல. 20, தே. வீ. செ. கட்டிடம்<br>கல்முனை. | : | 0675675925<br>0672220405 |
| புத்தளம் | : | பஸ் நிலையம் அருகாமை,<br>கல்பிட்டி. | : | 0325675925<br>0322260749 |
| மன்னார் | : | இல. 32, நல்லாயன் வீதி, மன்னார் | : | 0235676400<br>0232222373 |
| வவுனியா | : | இல. 67-68, பசார் வீதி,<br>வவுனியா. | : | 0242222483<br>0245678400 |
| முல்லைத்தீவு | : | வட்டாரம் இல. 1, புதுக்குடியிருப்பு<br>முல்லைத்தீவு. | : | - |
| கிளிநொச்சி | : | கண்டி வீதி, கிளிநொச்சி. | : | - |
| அம்பாந்தோட்டை | : | வெல்லவாய வீதி,<br>வீரவில்ல. | <br>: | <br>0475679205 |

| | | |
|---|---|---|
| மின்னஞ்சல் | : | slpalmyrah@yahoo.com |
| இணையத்தளம் | : | www.katpahachcholai.com |
| கணக்காய்வாளர் | : | தலைமை அதிபதி,<br>கணக்காய்வாளர் திணைக்களம். |
| சட்ட ஆலோசகர் | : | சட்டமா அதிபர்<br>சட்டத் திணைக்களம். |
| வங்கி | : | இலங்கை வங்கி |

## எமது நோக்கங்களும் இலக்குகளும்.

சபையின் இலக்குகளும் நோக்கங்களும் பின்வருமாறு:-

- ❖ பனையை அடிப்படையாகக் கொண்ட அபிவிருத்தி மற்றும் சமூக மேம்பாட்டிற்கு உதவத்தக்க நிறுவன ரீதியான அடித்தளத்தை வழங்குதல்.

- ❖ இலங்கையில் பனையை அடிப்படையாகக் கொண்ட தொழில் துறையின் நிலையான அபிவிருத்திக்கு நுண்ணிய, மத்தியதர, உயர்தொழில்நுட்ப மட்டங்களில் விஞ்ஞான ரீதியான சிறந்த அடித்தளத்தை ஏற்படுத்துதல்.

- ❖ அடிப்படை உத்திகள் மற்றும் உயர் தொழில்நுட்ப அபிவிருத்திக்கு வழிகாட்டத்தக்க பிரயோக ஆய்வுகள் மூலமாக பனைப்பயிரின் பாதுகாப்பு, பேணுகை, உற்பத்தி, அபிவிருத்தி என்பனவற்றுக்கான தொழில்நுட்பமுறைகளை அபிவிருத்தி செய்தல்.

- ❖ ஒன்றிணைந்த அபிவிருத்தி முயற்சிகளை நோக்கமாகக்கொண்டு பனை மற்றும் கால்நடை அபிவிருத்தி என்பனவற்றினை மேம்படுத்தல்.

- ❖ பனை அபிவிருத்திச் சபையின் மூலம் உருவாக்கப்படும் தொழில்நுட்பமுறைகளை இத்துறைசார்ந்து தங்கியிருப்போருக்கும் தொழிலதிபர்களுக்கும் தாக்கத்தை ஏற்படுத்தும் வண்ணம் இடம் மாற்றுதல்.

- ❖ பனை உற்பத்திக்குரிய வளங்களின் தேசிய களஞ்சியமாகச் செயற்படுதலும், பயிரிட உதவும் உபகரணங்களை சிறந்த முறையில் தயாரித்தலும்.

- ❖ பனை தொடர்பான தொழில்நுட்பத் தகவல்களை நடைமுறைப்பிரயோகங்களுக்கேற்ப பிரசித்தி பெற்ற விளக்கங்களோடு ஒப்பிடுதலும் பரப்புதலும்.

- ❖ பனையுடன் தொடர்பான நிறுவனரீதியான அபிவிருத்தி மற்றும் ஒத்துழைப்பு என்பவற்றின் ஊடாக உற்பத்தி முறைகளின் முகாமைத்துவத்தில் பல்வேறு தெரிவுகளை மேம்படுத்தலும் கிடைக்கச் செய்தலும்.

## பனைவளம்

பனைமரமானது அரக்கேசியா (Arecaceae) எனும் தாவரக்குடும்பத்திலுள்ள பொராசஸ் (Borassus) என்னும் தாவர இனத்தை சார்ந்ததாகும். பனைமரமானது தென்ஆபிரிக்கா, தென்கிழக்கு ஆசியா, இந்தோனேசியாவின் வடக்குப் பகுதி போன்ற இடங்களிலும் பரவிக் காணப்படுகின்றது.
இந்தியா, இலங்கை, இந்தோனேசியா, தாய்லாந்து ஆகிய நாடுகளில் காணப்படுகின்ற பனைமரங்களின் எண்ணிக்கைகள் முறையே மில்லியனில் 80, 11, 10 மற்றும் 02 ஆகும்.

இலங்கையில் பனை மரத்தின் பரம்பல் (2007)

| மாவட்டம் | பனை மரங்கள் |
|---|---:|
| யாழ்ப்பாணம் | 3,500.000 |
| கிளிநொச்சி | 3,500,000 |
| மன்னார் | 3,000,000 |
| முல்லைத்தீவு | 500,000 |
| திருகோணமலை | 210,000 |
| மட்டக்களப்பு | 200,000 |
| புத்தளம் | 120,000 |
| அம்பாறை | 40,000 |
| அனுராதபுரம் | 40,000 |
| வவுனியா | 8,000 |
| அம்பாந்தோட்டை | 2,000 |
| **மொத்தம்** | **11,120,000** |

**பனைவள உற்பத்திகளின் விபரம்**

| |
|---|
| **பனஞ்சாற்று அடிப்படையிலான உற்பத்தி**<br>i) நொதிப்படையாதவை: பனைவெல்லம்,பனம்பாணி,பதனீர்,கல்லாக்காரம்<br>ii) அற்ககோல் உற்பத்திகள் : சாராயம், போத்தலில் அடைக்கப்பட்ட கள்,<br>iii) நொதிப்படைந்த உற்பத்திகள்: வினாகிரி |
| **பனங்களி அடிப்படையிலான உற்பத்திகள்:**<br>போத்தலில் அடைக்கப்பட்ட பனங்களி, பனாட்டு, பாணிப்பனாட்டு, ஜாம், கோடியல், உடனடிப்பானம், மருத்துவ அடிப்படையிலான உற்பத்திகள். |
| **கிழங்கு அடிப்படையிலான உற்பத்திகள்:**<br>கிழங்கு, பச்சை ஒடியல், ஒடியல்மா, புளுக்கொடியல்மா, பாம்போசா, பிஸ்கட், கேக் |
| **பனை ஓலையினாலான உற்பத்திகள்:**<br>பாரம்பரிய கைப்பணிகள்:- நாரினால் பின்னப்பட்ட கூடை, பின்னல் கதிரை, கயு பொதிசெய்யும் பெட்டி, தேயிலைப் பெட்டி, தொப்பிகள், பாய்கள், ஈர்க்கில் உற்ப்பத்திகள், தும்பு உற்பத்தி, பல் துப்பரவு செய்யும் குச்சி, பூப்பானைகள், சுவர்மாட்டிகள், தும்பு கழிவுகள் மூலம் பூங்கன்றுகள் வளர்க்கும் பொருள், மண்சாடிகள் |
| **தும்பு அடிப்படையிலான பொருட்கள்:**<br>வைரத்தும்பு- தும்பு பிறஸ், நடுத்தர தும்பு- வீட்டுப்பொருட்கள் துப்பரவு செய்யும் பிறஸ் |
| **மரத்தாலான உற்பத்திகள்:**<br>கட்டடக் கூரைகள் உருவாக்கல், வீட்டுத்தளபாடங்கள் உருவாக்கல், சிப்போட், விறகுப்பயன்பாடு |

பனை அபிவிருத்திச் சபையின் தலைமையகம் யாழ்ப்பாணத்தில் நிறுவப்பட்டு நாட்டின் ஏனைய பகுதிகளில் ஒன்பது பிராந்திய நிலையங்களையும், பதின்மூன்று கற்பக விற்பனை நிலையங்களையும் பதினான்கு உற்பத்தி நிலையங்களையும், ஒரு ஆராய்ச்சி நிலையம், ஒரு பனை வடிசாலை அத்துடன் பதினைந்து மாதிரிப் பண்ணைகளும் நிர்வகிக்கப்படுகின்றன. அவற்றின் விபரம் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

## ஆ. செயல்திறன் தந்திரோயாயம் மற்றும் இடர் முகாமைத்துவம் தொடர்பான பார்வை

### வணிக செயற்திறனை தெரிவித்தல்

### அபிவிருத்தி (பயிரியல்)

**பனை விதை / பனை நாற்று நடுகை செயற்திட்டம்:-**

பனை அபிவிருத்திச் சபையானது, நாட்டின் பனை மரங்களின் எண்ணிக்கையை அதிகரித்தல் மற்றும் காணப்படும் பனை மரங்களை பாதுகாத்தல் என்பவற்றில் முழுக்கவனம் செலுத்திவரும் பனை சார் தொழில்துறையுடன் இணைந்த ஒரேயொரு அரச நிறுவனமாகும். இதற்காக பனை அபிவிருத்திச் சபையானது ஆண்டுதோறும் ஒக்டோபர் மாதம் தொடக்கம் டிசம்பர் மாத காலப்பகுதியில் பனை விதை நடுகை மற்றும் நாற்று நடுகை செயற்திட்டத்தை செயற்படுத்தி வருகிறது.

அழிவடைந்த பனை மரங்களை மீள் நிரப்புதல் மற்றும் பனை மரங்களின் எண்ணிக்கையை அதிகர்த்தல் எனும் நோக்குடன் கடந்த 2011ம் ஆண்டு ஒன்பது மாவட்டங்களில் 340,045 விதைகள் நாட்டப்பட்டுள்ளன. அத்துடன் 2012ம் ஆண்டு நாற்று உற்பத்திக்காக 262,125 விதைகள் பாத்திகளிலும் பொலித்தீன் பைகளிலும் நாட்டப்பட்டுள்ளன.

கடந்த மூன்று வருடங்களாக நாட்டப்படட பனை விதைகள் மற்றும் அவற்றின் முளைதிறன் விபரங்கள் கீழே அடைட்டவணைப்படுத்தப்பட்டுள்ளன.

| மாவட்டம் | 2009 | | 2010 | | 2011 | |
|---|---|---|---|---|---|---|
| | நடுகை செய்யப்பட்டவை | முளைத்தவை | நடுகை செய்யப்பட்டவை | முளைத்தவை | நடுகை செய்யப்பட்டவை | முளைத்தவை |
| யாழ்ப்பாணம் | 1,059,150 | 325,083 | 667,778 | 119,341 | 106,100 | இதுவரை மதிப்பிடப்பட வில்லை |
| மன்னார் | 179,870 | 56,500 | 124,100 | 37,600 | 50,000 | |
| வவுனியா | 150,000 | 60,000 | 61,000 | 27,450 | 38,420 | |
| கிளிநொச்சி | 15,300 | 6,120 | 217,500 | 97,875 | 75,000 | |
| முல்லைத்தீவு | 10,000 | 3,500 | 70,800 | 31,860 | 65,000 | |
| திருகோணமலை | 110,000 | 50,000 | 85,000 | 26,763 | 44,300 | |
| மட்டக்களப்பு | 473,800 | 189,920 | 100,000 | 37,140 | 112,350 | |
| அம்பாறை | 132,000 | 79,000 | 89,500 | 50,000 | 43,000 | |
| புத்தளம் | 44,000 | 20,565 | 45,250 | 27,486 | 50,000 | |
| அம்பாந்தோட்டை | 46,500 | 8,918 | 25,000 | 10,486 | 19,000 | |
| மொனராகலை | 46,500 | 13,950 | 10,000 | 3,000 | 0 | |
| **மொத்தம்** | **2,267,120** | **813,226** | **1,495,928** | **469,001** | **603,170** | |

2011ம் ஆண்டு நடுகை செய்யப்பட்ட பனை விதைகள் மற்றும் பனை நாற்றுக்களின் விபரம் கீழே அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

| மாவட்டம் | நடுகை செய்யப்பட்ட பனை விதைகள் | பாத்தி போடப்பட்ட பனை விதைகள | நடுகை செய்யப்பட்ட பனை நாற்றுக்கள் |
|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | 57,400 | 48,700 | 2,100 |
| மன்னார் | 0 | 50,000 | - |
| வவுனியா | 8,920 | 29,500 | - |
| கிளிநொச்சி | 50,000 | 25,000 | - |
| முல்லைத்தீவு | 34,325 | 30,675 | - |
| திருகோணமலை | 17,700 | 26,600 | 500 |
| மட்டக்களப்பு | 95,000 | 17,350 | 1,000 |
| அம்பாறை | 26,900 | 16,100 | - |
| புத்தளம் | 30,800 | 18,200 | - |
| அம்பாந்தோட்டை | 19,000 | 0 | - |
| மொனராகலை | 0 | 0 | - |
| **மொத்தம்** | **340,045** | **262,125** | |

**குறிப்பு:** 2011ம் ஆண்டு நாட்டப்பட்ட பனங் கன்றுகள் 2010ம் ஆண்டு போடப்பட்ட பாத்திகளில் இருந்து குடத்தனை மாதிரிப் பனந்தோட்டத்தில் உருவாக்கப்பட்டன.

வழமையாக பனை வதை நடுகை நிகழ்ச்சித் திட்டமானது ஆண்டின் ஐப்பசி மாதம் தொடக்கம் மார்கழி மாதம் வரையான காலப்பகுதியில் ஒழுங்குபடுத்தப்படுகின்றன. இந் நிகழ்ச்சித் திட்டமானது நாடு முழுவதுமுள்ள பிரதான கைவிடப்பட்ட நிலங்கள், தரிசு நிலங்கள் மற்றும் பனை அழிப்பின் போது ஏற்பட்ட இடைவெளிகள் என்பவற்றில் பனை விதை நடுகையை மேற்கொள்கிறது.

**பனை நாற்றுக்கள்:-**

பனை நடுகைச் செயற்திட்டத்தின் வினைத்திறனை அதிகரிக்கும் நோக்குடன் பனை அபிவிருத்திச் சபையானது பனை நாற்று நடுகையினை மேற்கொண்டு வருகிறது. இதன் அடிப்படையில் கடந்த ஆண்டு யாழ் மாவட்டத்தில் 6,000 தரமான பனை நாற்றுக்கள் உற்பத்தி செய்யப்பட்டன. இவற்றில் 1,100 பனை நாற்றுக்கள் யாழ் மாவட்டத்திலுள்ள பாடசாலைகளுக்கிடையில் இலவசமாகப் பகிரந்தளிக்கப்பட்டுள்ளன. 250 பனை நாற்றுக்கள் மன்னார் மாவட்டத்தில் மாந்தை மேற்கு பிரதேச செயலகத்திற்கு நடுகைக்காக வழங்கப்பட்டுள்ளன. 1,000 பனை நாற்றுக்கள் **"தெயட்ட செவண"** மரநடுகை நிகழ்ச்சித் திட்டத்திற்காக யாழ் மாவட்ட செயலகத்திற்கு இலவசமாக வழங்கப்பட்டுள்ளது.

இது தவிர 3012 பனை நாற்றுக்கள் முறையே; YMCA (2,000), மகேஸ்வரி நிதியம் (1,000) மற்றும் நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை (15) என்பவற்றிற்கு விற்கப்பட்டு ரூபா 250,750 சபைக்கு மேலதிக வருமானமாக பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 1,400 பனை நாற்றுக்கள் உற்பத்தி செய்யப்பட்டு 1,000 பனை நாற்றுக்கள் **"தெயட்ட செவண"** மரநடுகை நிகழ்ச்சித் திட்டத்திற்காக மாவட்ட செயலகத்திற்கு வழங்கப்பட்டுள்ளன.

திருகோணமலை மாவட்டத்தில் 1,700 பனை நாற்றுக்கள் உற்பத்தி செய்யப்பட்டு 500 நாற்றுக்கள் விவசாய திணைக்களத்திற்கு நடுகைக்காக இலவசமாக வழங்கப்பட்டுள்ளது.

**மாதிரிப் பனம் பண்ணைகள்:-**

பனை அபிவிருத்திச் சபையால் உருவாக்கப்பட்ட மாதிரிப் பனம் பண்ணைகளிலிருந்து சரியான வருவாயைப் பெற 15-20 ஆண்டுகள் தேவைப்படுவதனால் (பனை மரங்களின் முதிர்ச்சிக் காலம்) அக்காலப்பகுதிக்குள்ளாகவே அப் பண்ணைகளிலிருந்து வருமானத்தைப் பெறும் நோக்குடன் மரமுந்திரிகை, தென்னை, சவுக்கு, எலுமிச்சை, தோடை, வாழை, கொய்யா, மாதுளை போன்ற பயிர்களை ஊடுபயிர்களாக நாட்டப்படவுள்ளன. இப் பண்ணைகள் ஒரு வளங்கப்படுத்தலுக்குரிய பண்ணையாகவும் மற்றும் தனியாரை இது போன்ற பனை செய்கையில் ஈடுபட ஊக்குவிக்கவும் உதவியாக அமையும்.

மாதிரிப் பனம் பண்ணைகள் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், வவுனியா, அம்பாந்தோட்டை மாவட்டங்களில் காணப்படுகின்றன. மாதிப் பண்ணையை விஸ்தரிப்பதற்காக 13 இடங்களில் 730 ஏக்கர் காணி ஒதுக்கப்பட்டுள்ளது. இவற்றில் 2011ம் ஆண்டில் மாமுனை, ஊற்றுப்புலம், அறிவியல்நகர் காணிகள் வேலி அமைக்கப்பட்டும் மாமுனை மற்றும் புளியங்குளம் பண்ணைகளில் பண்ணைக் கட்டடங்கள் மீள் புணரமைக்கப்பட்டும் உள்ளன.

தற்போதுள்ள மாதிரிப் பனம் பண்ணைகள் தொடர்பான விபரங்கள் கீழே அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன.

| மாவட்டம் | இடம் | முக்கிய பயிர்கள் | பிரதேசம் |
|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | மாமுனை | பனை மற்றும் மரமுந்திரி | 500 ஏக்கர் (64 ஏக்கர் உபயோகத்தில் உள்ளது) |
| | சிங்கைநகர் | இளம் பனை | 50 ஏக்கர் |
| | ஊர்காவற்றுறை | கைவிடப்பட்டவை | 10 ஏக்கர் |
| | நெடுந்தீவு | இளம் பனை | 05 ஏக்கர் |
| | குடத்தனை | இளம் பனை | 10 ஏக்கர் |
| வவுனியா | புளியங்குளம் | இளம் பனை | 50 ஏக்கர் |
| | பாரதிபுரம் | இளம் பனை | 02 ஏக்கர் |
| கிளிநொச்சி | ஊற்றுப்புலம் | இளம் பனை | 50 ஏக்கர் |
| | கௌதாரிமுனை | அபிவிருத்திக்காக அண்மையில் பெற்றுக் கொள்ளப்பட்ட காணி | 10 ஏக்கர் |
| | முளங்காவில் | இளம் பனை | 2 ஏக்கர் |
| | அறிவியல் நகர் | அபிவிருத்திக்காக அண்மையில் பெற்றுக் கொள்ளப்பட்ட காணி | 7 ஏக்கர் |
| மன்னார் | நறுவிலிக்குளம் | இளம் பனை | 12 ஏக்கர் |
| அம்பாந்தோட்டை | வீரவில | பனை மற்றும் பல நோக்கங்களுக்கான மரங்கள் | 22 ஏக்கர் |

## விரிவாக்கல் நடவடிக்கைகள்

பனை அபிவிருத்திச் சபையானது விரிவான தொழிற்பயிற்சித் திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகிறது.

அவையாவன:-

1. பனங்கைப்பணிப்பயிற்சி
2. பனை மரம் சீவுதல் மற்றும் பதனீர்சார் உற்பத்திப் பயிற்சி
3. பனங்களி உற்பத்திப் பயிற்சி

இதற்காக பிரத்தியேகமாக பயிற்றுவிக்கப்பட்ட பனை அபிவிருத்திச் சபையின் 40 பயிற்றுவிப்பாளர்கள்/ போதனாசிரியர்களால் 7 மாவட்டங்களைச் சேர்ந்த வறிய கிராமங்களுக்குச் சென்று அங்குள்ள வேலையற்றோர், ஏழைகள், பாடசாலைக்கு செல்லாதவர்கள், வயது வந்த பெண்கள் போன்றோர்க்கு பயிற்சி நெறிகளை வழங்கி சுயதொழிலில் ஈடுபட ஊக்குவித்து வருகின்றனர்.

முழுமையான பனங்கைப்பணிப் பயிற்சி நெறியானது 06 மாத காலங்களுக்கும் மற்றைய இரண்டு பயிற்சிகளும் 03 மாத காலங்களுக்கும் வழங்கப்பட்டு வருகின்றன. கைப்பணிப் பயிற்சியின் முடிவில் பயிற்சியாளர்களினால் உற்பத்தி செய்யப்படும் தரமான பொருட்கள் பனை அபிவிருத்திச் சபையினால் கொள்வனவு செய்யப்படுகிறது.

கடந்த மூன்று வருடங்களாக பயிற்றப்பட்ட பயிற்சியாளர்களின் விபரம் கீழ்வருமாறு :

| மாவட்டம் | 2009 | 2010 | 2011 |
|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | 190 | 122 | 240 |
| திருகோணமலை | 78 | 34 | 91 |
| மட்டக்களப்பு | 103 | 160 | 219 |
| மன்னார் | 100 | 70 | 61 |
| வவுனியா | 120 | 81 | 82 |
| கல்முனை | 90 | 56 | 86 |
| கல்பிட்டி | 54 | 54 | 58 |
| கிளிநொச்சி | 0 | 20 | 55 |
| முல்லைத்தீவு | 0 | 0 | 39 |
| அனுராதபுரம் | 24 | 15 | 18 |
| மொனராகலை | 0 | 12 | 0 |
| குருநாகல் | | | 85 |
| அம்பாந்தோட்டை | 16 | 24 | 0 |
| **மொத்தம்** | **775** | **648** | **1034** |

கைப்பணிப் பயிற்சிக்காக செலவிடப்பட்ட செலவினங்கள் மற்றும் அதன் மூலம் பெறப்பட்ட உற்பத்திகளின் பெறுமதியும்

| வருடம் | செலவினம் ரூபா.மில் | பயிற்றப்பட்ட பயிற்சியாளர்கள் | நேரடித் தயாரிப்பாளர் | மறைமுகத் தயாரிப்பாளர் | சபைக்கு வழங்கும் பெறுமதி ரூபா.மில் | வெளியே வழங்கும் பெறுமதி ரூபா.மில் |
|---|---|---|---|---|---|---|
| 2009 | 11.89 | 775 | 235 | 320 | 2.00 | 10.72 |
| 2010 | 13.94 | 648 | 256 | 342 | 3.59 | 12.34 |
| 2011 | 19.09 | 1034 | 412 | 730 | 2.07 | 19.84 |
| மொத்தம் | **44.92** | **2457** | **903** | **1392** | **7.66** | **42.90** |

மேலதிக பயிற்சிகள்

1. **ஊழியர் பயிற்சி**

   பனை அபிவிருத்திச் சபையினால் 02 நாட்கள் திறன் மேம்பாட்டை விருத்திசெய்யும் பயிற்சிநெறி வழங்கப்பட்டது.

2. **பதனீர் சார் உற்பத்திப் பயிற்சி**

   பதனீர் வல்லுனர்களை ஊக்குவிக்கும் நோக்குடன் பனை அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் ஊடாக 390 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கான பதனீர் இறக்கும் உபகரணங்கள் மற்றும் கருவிகள் என்பவை வழங்கப்பட்டுள்ளன.

3. **பனங்களி உற்பத்திப் பயிற்சி**

   பனங்களி உற்பத்தி ஊக்குவிக்கும் நோக்குடன் பூநகரி கௌதாரிமுனையில் 20 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கான பனங்களி பதனிடும் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

<u>உற்பத்தி</u>

பனை அபிவிருத்திச் சபையானது உண்ணக்கூடிய உணவுப்பொருளாகவும், உணவற்ற பொருளாகவும் பனைசார்ந்த உற்பத்திப் பொருட்களை உற்பத்தி செய்கிறது. உண்ணக்கூடிய பொருட்கள் பிரதானமாக பனம்பழத்திலிருந்து பெறப்படுகின்றது. மேலும் உணவற்ற பொருட்கள் மற்றும் குடிவகைகள் என்பன உற்பத்தி செய்யப்படுகின்றது.

**உற்பத்தி அளவு:**

| | | | | |
|---|---|---|---|---|
| பதனீர் சார்ந்த உற்பத்திகள் | | | | |
| | | **2009** | **2010** | **2011** |
| பனங்கட்டி உற்பத்தி | மொத்த உற்பத்தி கி.கிராம் | 7,496 | 3,200 | 6,168 |
| பனம்பாணி உற்பத்தி | மொத்த உற்பத்தி லீற்றரில் | 1,457 | 504 | 1,042 |
| கல்லாக்கார உற்பத்தி | மொத்த உற்பத்தி கி.கிராமில் | 229 | 110 | 109 |
| பனம்பழம்/ பனங்களி அடிப்படையான உற்பத்திகள் | | | | |
| பனங்களி உற்பத்தி | மொத்த உற்பத்தி லீற்றரில் | 4,251 | 18,380 | 4,250 |
| மென்பான உற்பத்தி | போத்தல்களின் எண்ணிக்கை (190மி.லீ) | 16,756 | 14,862 | 8,285 |
| கோடியல் உற்பத்தி | போத்தல்களின் எண்ணிக்கை (750மி.லீ) | - | 6,000 | - |
| பனங்கிறஸ் உற்பத்தி | போத்தல்களின் எண்ணிக்கை(750மி.லீ) | 1,375 | 2,928 | 996 |
| ஜாம் உற்பத்தி | போத்தல்களின் எண்ணிக்கை (450கி) | 84 | 567 | 292 |
| பனாட்டு உற்பத்தி | மொத்த உற்பத்தி கி.கிராம் | 609 | 455 | 427 |
| பாணிப்பனாட்டு | மொத்த உற்பத்தி கி.கிராம் | 395 | 62 | 205 |
| ஓயில்கேக் உற்பத்தி | உற்பத்தி செய்யப்பட்ட எண்ணிக்கை (கி) | 2,342 | 2,575 | 1,770 |
| பனம் பலகார உற்பத்தி | உற்பத்தியான பைக்கற் எண்ணிக்கை | 2,610 | 2,927 | 4,664 |
| இனிப்பு உற்பத்திகள் | உற்பத்தி செய்யப்பட்ட எண்ணிக்கை | 6,455 | 7,095 | 10,850 |
| கிழங்கை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திகள் | | | | |
| பனங்கிழங்கு உற்பத்தி | மொத்த கொள்வனவு கி.கி | 300 | 13,868 | 955 |
| புழுக்கொடியல் உற்பத்தி | மொத்த கொள்வனவு கி.கி | 1,743 | 4,494 | 7710 |
| சீவல் ஒடியல் உற்பத்தி | மொத்த கொள்வனவு கி.கி | 1,326 | 1,378 | 430 |
| புளுக்கொடியல் மா உற்பத்தி | மொத்த கொள்வனவு கி.கி | 1,736 | 6,168 | 1,055 |
| ஓடியல்கூழ் உற்பத்தி | மொத்த கொள்வனவு (150கி) | 20 | 226 | 424 |
| பாம்போசா உற்பத்தி | மொத்த கொள்வனவு(150கி) | 191 | 146 | 666 |
| தும்பை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திகள் | | | | |
| தும்பு உற்பத்தி | மொத்த உற்பத்தி கி.கி | 5,660 | 4,108 | 1,594 |
| தும்புத்தடி உற்பத்தி | தும்புத்தடி எண்ணிக்கை | 2,266 | 287 | 110 |
| **விற்பனை செய்த தயாரிப்பு பரிமாற்ற மதிப்பு (ரூபா.மில்லி)** | | **6.19** | **6.23** | **8.72** |

உற்பத்தி நிலையங்களின் விபரம்:

| மாவட்டம் | பனைவெல்ல உற்பத்தி நிலையம் | பனந்தும்பு உற்பத்தி நிலையம் | பனங்களி உற்பத்தி நிலையம் | உணவுஞமென்பான உற்பத்தி நிலையம் |
|---|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | சிங்கைநகர் | சரசாலை | சிங்கைநகர் | யாழ்ப்பாணம் சந்தைப்படுத்தும்பகுதி |
| | நெடுந்தீவு | | நெடுந்தீவு | |
| மன்னார் | கட்டுக்காரன் குடியிருப்பு | செல்வாரி | படப்பாடி | |
| | தரவன்கோட்டை | ஓலைத்தொடுவாய் | | |
| | படப்பாடி | | | |
| திருகோணமலை | வரோதயநகர் | | வரோதயநகர் | |
| மட்டக்களப்பு | | | முகத்துவாரம் | |
| கொழும்பு | | | | பம்பலப்பிட்டி |
| புத்தளம் | | கற்பிட்டி | கற்பிட்டி | |

<u>சந்தைப்படுத்தல்</u>
பனை அபிவிருத்திச் சபையானது கற்பகம் விற்பனை நிலையத்தின் ஊடாக பனை அபிவிருத்திச் சபையின் உற்பத்திகளையும் பனைவளம் சார்ந்த உறபத்தியாளர்களது உற்பத்திகளையும் உற்பத்தி செய்கின்றது

**விற்பனை நிலையங்கள் (கற்பகங்கள்)**
**யாழ்மாவட்டம்**
1. நெல்லியடி – பருத்தித்துறை வீதி, வடமராட்சி
2. நல்லூர் - பருத்தித்துறை வீதி, நல்லூர்
3. சுன்னாகம் - சந்தை உட்புறம் சுன்னாகம்
4. காட்சியறை – சந்தைப்படுத்தும் பகுதி, கண்டி வீதி, யாழ்ப்பாணம்
5. இல. 129b, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்
6. யாழ்ப்பாணம் பஸ் நிலையம்

**கொழும்பு மாவட்டம்**
1. 244 காலி வீதி, கொழும்பு 04
2. தேசிய அருங்கலைகள் பேரவை, பத்தர முல்ல

**மன்னார் மாவட்டம்**
1. பெரிய கடை மன்னார்

**மட்டக்களப்பு மாவட்டம்**
1. 15, UDA கட்டடம், மட்டக்களப்பு
2. காட்சியறை, வெளிச்சவீடு, மட்டக்களப்பு

**திருகோணமலை**
1. மின்சார நிலைய வீதி, திருகோணமலை

**வவுனியா**
1.67/68 கடைவீதி, வவுனியா

**அம்பாறை மாவட்டம்**
1. 107 B, மட்டக்களப்பு வீதி, கல்முனை

மொத்த விற்பனை கற்பக விற்பனை நிலையம் (2009-2011)

| | கற்பகங்கள் | 2009 | 2010 | 2011 |
|---|---|---|---|---|
| | **யாழ்ப்பாணம்** | | | |
| 1 | வடமராட்சி | 285,094.00 | 305,555.50 | 251,793.00 |
| 2 | நல்லூர் | 757,960.50 | 1,581,683.50 | 1,433,820.30 |
| 3 | சுன்னாகம் | 188,110.50 | 292,205.00 | 140,985.00 |
| 4 | காட்சியறை | 894,375.25 | 1,663,932.00 | 1,368,420.95 |
| 5 | கே.கே.எஸ் வீதி | 1,225,754.44 | 2,275,333.25 | 1,560,354.00 |
| 6 | பஸ்நிலையம் | …….. | ……… | 345,887.00 |
| 7 | பி.சி | | 1,200.00 | …………… |
| | கொழும்பு | | | |
| 8 | கற்பகம் | 2,765,246.90 | 3,232,198.00 | 5,226,232.75 |
| 9 | களஞ்சியம் | 445,226.00 | 78,000.00 | 57,925.00 |
| 10 | ஜனகலா | ……….. | ………… | 13,143.00 |
| 11 | வவுனியா | 3,575,417.00 | 5,505,083.40 | 4,212,451.00 |
| | மட்டக்களப்பு | | | |
| 12 | கற்பகம் | 270,386.90 | 687,829.40 | 267,335.00 |
| 13 | காட்சியறை | 463,649.60 | 650,458.00 | 393,283.00 |
| 14 | கல்முனை | 467,121.00 | 227,073.90 | 339,030.00 |
| 15 | மன்னார் | 205,610.00 | 1,089,315.85 | 1,051,901.40 |
| 16 | திருகோணமலை | 318,785.36 | 444,884.52 | 406,683.50 |
| 17 | பி.சி.மன்னார் | | | |
| | பனைவெல்லம் | 118,633.25 | …. | …. |
| | தும்பு | 11,618.00 | | |
| 18 | பி.சி.கற்பிட்டி | 41,185.00 | 46,190.00 | 7,225.00 |
| 19 | வீரவில | 195,437.80 | 166,973.00 | 170,749.00 |
| 20 | நடமாடும் விற்பனை சேவை | 1,454,556.85 | 1,762,416.00 | 1,914,145.30 |
| | **மொத்தம்** | **13,684,158.35** | **20,010,331.82** | **19,161,364.20** |

## ஆராய்ச்சியும் அபிவிருத்தியும் – செயற்பாட்டு அறிக்கை 2011

பனைவள ஆராய்ச்சி நிறுவனம் (கைதடி, யாழ்ப்பாணம்) தற்பொழுது மீள்நிர்மாணம் செய்யப்படுகின்றது. இது பனை அபிவிருத்திச் சபையினால் 1986 ம் ஆண்டில் நிறுவப்பட்டது. இவ்வாராய்ச்சி நிறுவனம் பனைவளம் தொடர்பான பல ஆய்வுகளை மேற்கொண்டிருந்தது. 1996 ம் ஆண்டில் ஏற்பட்ட போர்ச்சூழல் காரணமாக முற்றாக பாதிப்படைந்தது.

கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனம் (ITI), தேசிய பொறியியல் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையம் (NERD), யாழ்பல்கலைக்கழகம், ஸ்ரீஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகம் மற்றும் கிழக்கு பல்கலைக்கழகம் ஆகியவற்றுடன் இணைந்து இன்றுவரை ஆராய்ச்சி நடவடிக்கைகள் மேற்றொகள்ளப்படுகின்றன.

2011 ம் ஆண்டில் பனை அபிவிருத்திச் சபையின் ஆராய்ச்சிப்பிரிவும் கைத்தொழில் தொழில் நுட்ப நிறுவனமும் (ITI) இணைந்து "**தொழிற்சாலை ரீதியில் பதனீர் போத்தலில் அடைத்தல்**" தொடர்பான ஆராய்ச்சி நிறைவேற்றப்பட்டது. இவ் ஆராய்ச்சியின் பயனாக பின்வரும் முடிவுகள் பெறப்பட்டன.

இந்த ஆராய்ச்சியின் மூலம் பதனீரானது மரத்திலிருந்து பெறப்படும்போது மண் கலயங்களில் சேகரித்தலே சிறந்தது என உறுதிப்படுத்தப்பட்டது. பாரம்பரிய முறையில் பானையினுள் சுண்ணாம்பு இடுதலால் உற்பத்திகளில் சுண்ணாம்புத் தன்மை அதிகரித்துக் காணப்படுகின்றது. இதைக்கட்டுப்படுத்துவதற்கு பெறப்படுகின்ற பதனீரின் அளவிற்கு ஏற்ப சேர்க்கப்படவேண்டிய சுண்ணாம்பின் அளவு நிர்ணயிக்கப்பட்டது. மண்கலயத்தினுள் பதனீர் சேகரிக்கப்படும்போது சுண்ணாம்பு பூசுவதற்கு பதிலாக சுண்ணாம்பை வில்லைகளாக (Tablets) சேர்க்கப்பட வேண்டும். மேலும் பதனீர் நொதித்தலடையாமல் தடுப்பதற்காக ஐந்து முறைகளில் இவ்வாராய்ச்சி மேற்கொள்ளப்பட்டது. அவையாவன:- சோடியம் மெற்றாபை சல்பைட் இடல், கல்பாக் எனும் மரப்பட்டை இடல், பிளாஸ்ரிக் பானை பாவித்தல், பானைகளை மூடி பொலித்தீன் இடல், பானைகளின் கழுத்தில் சுண்ணாம்பிடல் போன்றவையாகும். இம்முறைகள் பதனீர் நொதிப்படைவதை தடுக்கும் செய்முறையில் சிறந்த பெறுபேறுகளை காட்டவில்லை. இவ் ஆய்வு மூலம் பானைகளில் பெறப்படும் பதனீர் இரண்டு மணித்தியாலத்திற்குள் தொழிற்சாலைக்கு கொண்டு வரப்படவேண்டும் என அறியப்பட்டது. மேலும் பன்னிரண்டு மணித்தியால இடைவெளியில் (மாலைதொடக்கம் அடுத்தநாள் காலை வரை) பெறப்பட்ட பதனீரே போத்தலில் அடைப்பதற்கு மிகப்பொருத்தமாக உள்ளது. பதனீர் சேகரிக்கத்தொடங்கி இருபத்துநான்கு மணித்தியாலங்களிற்குப்பின் போத்தலில் அடைக்கும்போது நொதித்தல் இடமபெறுவதற்குரிய சந்தர்ப்பங்கள் அதிகமாகும்.

பதனீரிலுள்ள கல்சியத்தை அகற்றுவதற்கு மென்சவ்வு (Membrane) வடிகட்டல் தொழில்நுட்பம் சிறந்தது என அறியப்பட்டது. இம்முறை பெரியளவில் பதனீர் பதப்படுத்தலில் இலகுவானதாகவும் அதேநேரம் தெளியவைத்து வடித்தலைவிட பொருத்தமானதாகவும் அறியப்பட்டது. ஆகவே மென்சவ்வு (Membrane) வடிகட்டல் தொழில்நுட்பம் இவ்வுற்பத்தியில் மிகப் பொருத்தமான முறையாகக் காணப்படுகின்றது. தயாரிக்கப்பட்ட உற்பத்திகள் "பாஸ்ரறைஸ்" முறை அல்லது கிருமிநீக்கமுறை (Sterilized) மூலம் பதப்படுத்தி தரமான முடிவுப்பொருளை பெறமுடியும். கிருமிநீக்கம் செய்யப்பட்ட (Sterilized) உற்பத்திகளின் வாழ்வுக்காலம் ஒரு வருடத்திற்கு மேல் பாவிக்க முடியும். அதே நேரம் "பாஸ்ரறைஸ்" முறைமூலம் பதப்படுத்தப்பட்ட உற்பத்திகளின் பாவனைக்காலம் ஆறமாதங்கள் ஆகும். ஆத்துடன் கிருமிநீக்கம் செய்யப்பட்ட உற்பத்திகள் (Sterilized) புலன்சார்ந்த (Sensory properties) பெறுபேறுகளின் அடிப்படையில் சிறந்ததாக அறியப்பட்டது.

## செயற்பாட்டுப் பெறுபேறுகளின் மீளாய்வு

| விபரம் | 2009 | 2010 | 2011 |
|---|---:|---:|---:|
| விற்பனைப்புரள்வு | 13,684,158.35 | 20,010,331.82 | 19,161,364.20 |
| விற்பனை இலாபம் | 4,577,533.74 | 5,063,043.81 | 4,938,440.43 |
| ஏனைய வருமானம் | 756,962.02 | 677,879.23 | 8,233,275.48 |
| இலாபம் ( நட்டம் ) | (9,644,685.12) | (14,415,132.60) | (3,145,965.01) |
| தேய்மானம் தவிர்ந்த இலாபம் (நட்டம்) | (4,719,602.10) | (9,667,271.26) | 3,163,300.49 |
| அரச பங்களிப்பு - மீண்டுவரும் | 53,000,000.00 | 53,500,000.00 | 55,000,000.00 |
| அரச பங்களிப்பு - மூலதனனம் | 23,320,000.00 | 30,000,000.00 | 30,000,000.00 |
| உத்தியோகத்தர் தொகை | 208 | 208 | 199 |
| **தனிப்பட்ட ஊதியம்** | 52,739,609.72 | 56,402,330.18 | 46,344,200.84 |

## நிதியியல் மீளாய்வு

| | 2009 | 2010 | 2011 |
|---|---:|---:|---:|
| <u>வருடத்திற்கான ஆரம்ப மிகுதி</u> | 5,475,847.75 | 5,889,221.04 | 4,071,694.58 |
| <u>பணக்கொடுப்பனவற்ற அசைவு</u> | | | |
| தேய்மானம் | 4,925,083.02 | 4,747,861.34 | 6,309,265.50 |
| கடன்பட்டோர்களின் அதிகரிப்பு/ குறைவு | (1,385,527.20) | 119,778.31 | 1,048,382.70 |
| கடனாளர்களின் அதிகரிப்பு/ குறைவு | (6,229,133.54) | (1,139,003.24) | (581,393.01) |
| கையிருப்பின் அதிகரிப்பு/ குறைவு | (570,165.79) | (1,555,224.64) | (807,368.23) |
| முன்னைய வருட சீராக்கல். | (377,469.94) | - | 2,464,642.18 |
| | <u>(3,637,213.45)</u> | <u>2,173,411.77)</u> | 8,433,529.14 |
| | <u>1,838,634.30</u> | <u>8,062,632.81</u> | 12,505,223.72 |
| <u>உட்பாய்ச்சல்</u> | | | |
| விற்பனைப் புரள்வு | 13,684,158.35 | 20,010,331.82 | 19,161,364.20 |
| ஏனைய வருமானம் | 756,962.02 | 677,879.23 | 8,233,275.48 |
| ஏன். ஜி. ஒ | 367,145.00 | (19,420.00) | (347,725.00) |
| அமைச்சு | …….. | ……….. | 4,102,841.70 |
| திறைசேரி மானியம் | | | |
| - மீண்டுவரும் | 53,000,000.00 | 53,500,000.00 | 55,000,000.00 |
| -மூலதனம் | <u>23,320,000.00</u> | <u>30,000,000.00</u> | <u>30,000,000.00</u> |
| | <u>76,320,000.00</u> | <u>83,500,000.00</u> | <u>85,000,000.00</u> |
| | 92,966,899.67 | 112,231,423.86 | 128,654,980.10 |
| <u>வெளிப்பாய்ச்சல்</u> | | | |
| ***மீண்டுவரும் செலவினம்*** | 77,085,805.49 | 88,603,343.65 | 85,540,604.69 |
| ***மூலதனச் செலவினம்*** | | | |
| ◎ நிலையான சொத்துக்கள் | 5,606,586.34 | 17,059,135.22 | 20,381,143.91 |
| ◎ ஏனைய சொத்துக்கள் | 4,385,286.80 | 2,497,250.41 | 21,001,743.02 |
| | **<u>87,077,678.63</u>** | **<u>108,159,729.28</u>** | **<u>126,923,491.62</u>** |
| *வருடத்திற்கான இறுதி மீதி* | **5,889,221.04** | **4,071,694.58** | **1,731,488.48** |

## ஆபத்து முகாமைத்துவம்

- பனை அபிவிருத்தியுடன் தொடர்பான ஒரே அரச நிறுவனம் இதுவாகும். பனை ஒரு பருவகால உற்பத்தியாதலின், வளங்களை முறையாக முகாமைத்துவம் செய்வது சபையின் நிலையான நடவடிக்கைகளுக்கு அவசியமாகும்.
- பனை ஒரு வரண்ட நிலப்பயிராதலின், பனை அபிவிருத்தித் துறையை மேம்படுத்திக்கொள்ளும் நோக்குடன் இதன் எண்ணிக்கையை அதிகரித்துக்கொள்வதற்கும், தற்போதுள்ள பனை மரங்களைப் பேணிக்கொள்ளவும் முறைசார்ந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டியுள்ளன.
- பனையில் தங்கி வாழும் பெருமளவு மக்கள், சுனாமி அனர்த்தம் நிகழ்ந்த பிரதேசங்களில் வாழ்பவர்கள் அவர்களுக்குரிய பரிகார நடவடிக்கையாவும், அவர்களது சமூக, பொருளாதார நிலைகளை மேம்படுத்தும் நோக்குடனும் சபை அவர்களின் உற்பத்திப் பொருட்களை போட்டி விலையில் சந்தைப்படுத்த வேண்டியுள்ளது.
- கடந்த இரு வருடங்களாக ஏற்பட்ட பாதகமான பருவகாலமாற்றத்தால் பனைசார்ந்த உற்பத்திப் பொருட்களின் விளைவு பாதகமாககாணப்பட்டது.
- பனைசார்ந்த நுகரும் உற்பத்திப் பொருட்கள் அழிவடையும் இடரிலிருந்து தடுப்பதற்கு விசேடமான உணவு பாதுகாப்பு முறைகள் இணைக்கப்படவேண்டி இருக்கின்றது.
- வட-கிழக்குப்பகுதிகளில் பல்வேறு பாதக தன்மைகளால் பனை அழிக்கப்பட்டது எனினும் இதை தடுக்க 2000களில் சட்டம் இயற்றப்பட்டது.
- யதார்த்தமான வரவு செலவுத்திட்டத்தை வரைவதன் மூலம் வடிவமைக்கப்படும் ஒழுங்கமைப்பினால் உள்ளகக் கட்டுப்பாடுகள் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

## உத்திகள்

- பனையை அடிப்படையாகக் கொண்ட உற்பத்தித் துறையின் அபிவிருத்திக்கும் அதனுடன் தொடர்பான மக்களின் வாழ்வு மேம்பாட்டுக்கும் சிறந்த முயற்சிகளை மேற்கொள்ளும் முதன்மை நிறுவனமாக பனை அபிவிருத்திச் சபை விளங்குதல்.
- மேலும் பனம் பயிர்ச்செய்கையின் முன்னேற்றகரமான வளர்ச்சி, ஏனைய ஊடுபயிர்களின் வளர்ச்சி, பனை மரத்தோட்டங்களில் கால்நடை வளர்ப்பு நோய்களிலிருந்தும், தொல்லை தரும் சிறு பிராணிகளிடமிருந்து பயிர்களைக் காக்கும் செயற்பாடுகள் என்பவற்றுக்காக விஞ்ஞான ரீதியான ஆய்வுகளைத் தொடர்ந்து நடத்துதல்.
- பனம் விதை நடும் வருடாந்த செயற்திட்டத்தை மேலும் விரிவுபடுத்தல்.
- பனை வளரும் பிரதேசங்களில் இளம் பனையோலை, பனந்தண்டு, ஈக்கிள் போன்றவற்றை மூலப்பொருட்களாகக் கொண்டு உருவாக்கப்படும் கைவினைப்பொருள் உற்பத்தி தொடர்பாக பனை அபிவிருத்திச் சபை, தொழிற்பயிற்சி அமைச்சுடன் இணைந்து இப்பிரதேச இளம் பெண்களுக்கு பயிற்சி வழங்கும் திட்டமொன்றைச் செயற்படுத்துதல்.
- பயிற்றுவிப்பாளர்களை ஊக்குவிக்கும் வகையில், அவர்கள் பணி செய்வதற்குத் தேவையான மூலதனத்தின் ஒரு பகுதியை வழங்குவதோடு, பயிற்சி பெறுவோர் ஊடாக தரமான உற்பத்திகளை சபைக்குப் பெற்றுக்கொள்வதையும் உறுதிப்படுத்திக் கொள்ளல்.
- இயற்கை அனர்த்தங்களாலும், மனிதர்களால் ஏற்படுத்தப்படும் அழிவுகளாலும் பாதிக்கப்பட்ட பனம் பயிர்ச்செய்கையை மீளப் புனரமைத்தல்.
- பனையை அடிப்படையாகக் கொண்ட விதை நாட்டல், நார் உற்பத்தி, கைப்பணிப் பொருட் பயிற்சி என்பவற்றை நடைமுறைப்படுத்தும் பங்காளராக பனை அபிவிருத்திச் சபை விளங்குவதோடு, உதவி வழங்கும் நிறுவனங்களை ஈர்ப்பதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொள்கிறது.
- சர்வதேச சந்தையின் வாய்ப்புக்களைப் பெற்றுக்கொள்வதற்காக தொடர்ச்சியான தேடல்களை மேற்கொள்ளல்.

## மனித மூலதனம்

உத்தியோகத்தர்களின் உற்பத்திச் செயற்திறனை மேம்படுத்தும் வகையில் சபையை மீளமைக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்நிறுவனத்தில் பணிபுரியும் ஊழியர்களும் உத்தியோகத்தர்களுமே இதன் சொத்து என ஏற்றுக்கொள்கின்ற அதே வேளை, அவர்களின் பங்களிப்பை மேம்படுத்தும் வகையிலும், நிறுவன நலனுக்காகவும் சிறந்த பயிற்சித்திட்டங்கள், புலமைப்பரிசில்கள், பயிற்சிப் பட்டறைகள் என்பவை வடிவமைக்கப்பட்டுச் செயற்படுத்தப்படுகின்றன.

## சூழல் பற்றிய அறிக்கையிடல்

பனை சிறந்த ஒரு உணவுப் பொருளாக அமைவதோடு ஒரு நாட்டின் பொருளாதாரத்தை நிர்ணயிக்கும் முதலாவதும், முக்கியமானதுமான ஒரு பயிராகவும், மருத்துவ ரீதியில் பயன்தரும் பயிராகவும் அமைவதால் பனை அபிவிருத்தியை புத்துயிரூட்டச் செய்வதற்கு விசேட தொழில்நுட்ப முறைகள் செயற்படுத்தப்படுகின்றன.

பனை மரம் மனிததேவைகட்காவும் போரினாலும் அழிக்கப்பட்டு வருகின்றது. இதனால் “மகிந்த சிந்தனை”, “வடக்கின் வசந்தம்” திட்டத்தின் கீழ் வடக்கிலும் "கிழக்கின் உதயம்” திட்டத்தின் கீழ் கிழக்கிலும் மீள்நடுகை செய்யப்பட்டு வருகின்றது.

பனை உணவுகள் இயற்கையானவை இதனாலும் இதன் உண்ணக்கூடிய உண்ணமுடியாத உற்பத்திப் பொருட்களுக்கு அதிகரித்த கேள்வி நிலவுவதாலும் சபை பனை மரங்களின் எண்ணிக்கையை 11 மில்லியனில் இருந்து 20 மில்லியன் வரை அதிகரிக்கவுள்ளது

அத்துடன் பனம் கைப்பணிப்பொருட்கள் இயற்கைக்கு இசைவானவை. இவ் வருடத்தில் 3 அரசசார்பற்ற நிறுவனங்களால் பங்களிப்பு செய்யப்பட்டது. இது மட்டுமில்லாது கிராம மட்டங்களில், மிகவும் வறுமையில் வாழும் மக்களினதும், குறைந்த வருமானம் பெறும் மக்களினதும் சமூக, பொருளாதார வாழ்வு நிலையை மேம்படுத்துவதற்கு ஏதுவாக அமைகின்றது.

## (இ) நிறுவன ஆளுகை

இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனம், பொதுமுயற்சிகள் திணைக்களம், நிதி அமைச்சு, என்பவற்றின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட நடைமுறைகளையும், பொறுப்பான அமைச்சு வழங்கும் வரையறைகளையும் நாம் பின்பற்றுகின்றோம்.

### பணிப்பாளர் சபை.

முன்னரே குறிப்பிட்டதுபோல, 1971 ஆம் ஆண்டின் 46ம் இல, தென்னை அபிவிருத்திச் சட்ட மூலம், மற்றும் 1975ஆம் ஆண்டின் 24ஆம் இல திருத்தச் சட்ட மூலம், 2003ஆம் ஆண்டின் 40 ஆம் திருத்தச் சட்ட மூலம் என்பவற்றின் கொள்கைகளையே பனை அபிவிருத்திச் சபை பின்பற்றுகின்றது. பணிப்பாளர் சபை 9 உறுப்பினர்களைக் கொண்டதாகவும், கௌரவ அமைச்சர் அவர்களால் நியமிக்கப்படுவதாகவும் அமையும். நிதி அமைச்சுக்குப் பொறுப்பான அமைச்சரின் பிரதிநிதியாக நியமிக்கப்படும் உறுப்பினரே நிதிக்குப் பொறுப்பானவராக அமைவார். ஏனைய 8 உறுப்பினர்களுள் ஒருவர், கௌரவ அமைச்சர் அவர்களால் தலைவராக நியமிக்கப்படுவார்.

### பணிப்பாளர் சபைக் கூட்டங்கள்.

சபைக் கூட்டங்கள் முக்கியமான கொள்கைகள், நிர்வாகம் மற்றும் முகாமைத்துவ விடயங்களை ஆராயவும், தீர்மானிக்கவும் ஒவ்வொரு மாதமும் கூடுகின்றன. 2011 ஆம் ஆண்டு 08 கூட்டங்கள் நடைபெற்றுள்ளன.

### கணக்காய்வாளர் முகாமைத்துவக்குழு

இக்குழுவில் கணக்காய்வாளர் முகாமைத்துவக்குழுப் பணிப்பாளரின் தலைமையின் கீழ் சுயேச்சையான நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளராக பிரதி நிதிப்படுத்தும் திறை சேரி நாயகம் உட்பட இன்னும் வேறுநிறைவேற்று அதிகாரமற்ற இரு பணிப்பாளர்கள் இடம் பெறுவர் அழைப்பாணையின் பேரில் சிரேஷ்ட நிறைவேற்று அதிகாரி கூட்டங்களில் கலந்து கொள்வார்கள் கணக்காய்வாளர் முகாமைத்துவக் குழு ஏனைய நடவடிக்கைகள் உட்பட உள்ளகக்கட்டுப்பாட்டு முறை இடர்முகாமைத்துவ நடவடிக்கைகளை மேற் கொள்ளுதல் சட்டவிதிகளின் தேவைக்கு இணக்கமாக செயற்படுதல் ஆகிய அம்சங்களை மீளாய்வு செய்கிறது.

### கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக்குழு அறிக்கை

கணக்காய்வு முகாமைத்துவக் குழுவில் பின்வரும் பணிப்பாளர்கள் உறுப்பினர்களாவர்

| | | |
|---|---|---|
| திருமதி. எம்.கங்காதரன் (திறைசேரி) | - | தலைவர் |
| திரு.கே.பி ஜெகதீஸ்வரா | - | பணிப்பாளர் |
| திரு. எஸ். . சந்துரு | - | பணிப்பாளர் |

இக்குழு பொதுமுகாமையர் முகாமையாளர் (நிதி நிர்வாகம்), அழைப்பின் பேரில் கணக்காய்வாளர் திணைக்கள கணக்காய்வாளர் ஆகியோரைக் கொண்டதாகும்.

கணக்காய்வு முகாமைத்துவக் குழு பின்வரும் வழிகளில் சபை பணிப்பாளர்கட்குதவுகின்றது.

அ. நேரகாலத்திற்கும் ஸ்திரமாகவும் நிதி அறிக்கையிடப்பட்டதை உறுதிப்படுத்தல்.

ஆ. வியாபார ஆபத்து முகாமைத்துவம் பற்றி அறிக்கையிடல்.

இ. முகாமைத்துவ உள்ளகக் கட்டுப்பாடு பற்றி அறிக்கையிடல்.

ஈ. உரிய கட்டுப்பாடு, உள்ளக, வெளியார், நிதி சம்பந்தமானவை உரியமுறையில் அறிக்கையிடப்பட்டதை உறுதிப்படுத்தல்.

உ. சட்டத்தையும் கொள்கைகளையும் அமுல்படுத்தியதை உறுதிப்படுத்தல்.

ஊ. உள்ளகக் கணக்காய்வார் கடமையை உறுதிப்படுத்தல்.

எ. கணக்காய்வாளர் திணைக்கள கடமையை உறுதிப்படுத்தல்.

மேலும் கணக்காய்வு முகாமைத்துவக் குழு நிதி பற்றி அறிக்கைகள் உரியகாலத்தில் அறிக்கையிடப்பட்டதை உறுதிப்படுத்தல்.

கணக்காய்வாளர் திணைக்கள அறிக்கையில் கருத்தில்கொள்ளக்கூடிய தகவல்கள் பெறப்பட்டு அவை ஆராயப்பட்டதுடன் திருப்தியுறும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடு சபை சொத்துக்கள், நிதிகூற்றுக்கள் மற்றும் ஏனையவை உயரளவில் பேணும்வகையில் கருத்தில் கொள்ளப்படுகின்றது.

### உள்ளகக் கட்டுப்பாடு

விநியோக நடவடிக்கைகளைப் பொறுத்தவரை அவசியமான நடைமுறைகளை உறுதிப்படுத்துவதற்காக விலை மனுச்சபை, விலை நிர்ணயக் குழு, கொள்வனவுக் குழு என்பவற்றை நியமிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. உள்ளகக் கணக்காய்வு நிதிக் கொடுக்கல் வாங்கல் தொடர்பான அனைத்துச் செயற்பாடுகளிலும் மிகுந்த கண்காணிப்புடன் செயற்படுகின்றது.

## முகாமைத்துவம்

பொதுமுகாமையாளரின் கீழ், ஆறு பிரிவுத் தலைவர்கள் செயற்படுகின்றனர். பிரிவுத் தலைவர்கள் மாவட்ட இணைப்பாளர்களுடன் இணைந்து பணியாற்றுகின்றனர். ஒவ்வொரு பிரிவுத் தலைவரும் பிரதான நிறைவேற்று அதிகாரியான பொதுமுகாமையாளருக்கு தமது அறிக்கைகளைச் சமர்ப்பிக்கின்றனர்.

## பிறவிடயங்கள்

- அனுபவமும் ஆற்றலுமுள்ள தொழிலாளர்களின் சடுதியான, பதநீர் எடுக்கும் போது மேற்கொள்ளவேண்டிய கஷ்டமான நடைமுறை ஆகியன பனை வள வழங்களை கட்டுப்படுத்துதல்.
- தேவைக்கு அதிகமான பனைமரங்களை பாதுகாத்தல், மரப்பலகை உற்பத்தி செய்தல் ஆகிய காரணங்களுக்காக வெட்டுவதனால் பனைமரங்களின் தொகை தொடர்ந்து குறைவடைந்து செல்லும் போக்கினைக் கொண்டுள்ளது.
- அரசாங்கத்தினதும் தனிப்பட்டவர்களினதும் இத்துறைக்கான மூலதனம் பாய்ச்சல் போதியளவு இல்லாமை.
- பனம் பொருட்களுக்கான விசேட ஆய்வு கூடவசதிகள் இல்லாமையும், ஆய்வுகளுக்கான நிதி ஒதுக்கீடு இல்லாமையும், பனம் பொருள் உற்பத்தித்துறையின் யதார்த்தமான அபிவிருத்திக்கு விஞ்ஞானத்துறை வளர்ச்சியின் பங்களிப்பு இல்லாதிருத்தல்.
- பனம் பொருள் உற்பத்தியின் போது பருவகால ஆரம்ப உற்பத்திப்பொருட்கள் அளவுக்கு மேலதிகமாக இருத்தல் அதனைத் தொடர்ந்து இவை அழிவடையும் தன்மையினால் வருடமுழுவதும் பனை உற்பத்தியிப் பொருட்களை பாதுகாக்கக்கூடிய களஞ்சியவசதி இல்லாத குறையை நிவர்த்தி செய்யவேண்டிய நிலைமை.
- போதிய அளவு அக்கறையும் முயற்சியும் உபாயங்களும் மேற்கொள்ளப்படாத காரணங்களினால் உள்நாட்டிலும், சர்வதேசமட்டத்திலும் நிலவும் செழிப்பற்ற சந்தை வலைப்பின்னலை அபிவிருத்தி செய்ய இயலாமை.
- உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பனம் பொருட்கள்இ உள்நாட்டு சந்தைகளில், வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட குறைந்த விலையுள்ள பனம் பொருட்களின் உட்பிரவேசத்தினால் மந்த நிலையில் இருத்தல்.
- பனம் பொருட்கள் உற்பத்தி துறையைக் கட்டுப்படுத்துவதற்கும் நிருவகிப்பதற்கும் புறம்பான சட்டவிதிகள் இல்லாமை.
- விஞ்ஞானிகளின் அக்கறை இன்மையும், பனம் பொருட்களுக்கான விசேட ஆய்வு கூடவசதிகள் இல்லாமையும், ஆய்வுகளுக்கான நிதி ஒதுக்கீடு இல்லாமையும், பனம் பொருள் உற்பத்தித்துறையின் யதார்த்தமான அபிவிருத்திக்கு விஞ்ஞானத்துறை வளர்ச்சியின் பங்களிப்பு இல்லாதிருத்தல்.
- பனை உற்பத்திப் பொருட்கள் போட்டி விலைகளில் சில்லறை வியாபாரிகளினால் விற்கப்படுவதால் கடுமையான விலை நிர்ணயக்கொள்கை ஒன்றைப் பின்பற்ற வேண்டியுள்ளது. அதே வேளை ஏற்றுக் கொள்ளத்தக்க தர நியமத்தையும் பேண வேண்டி உள்ளது.
- கைப்பணிப்பொருட்களிற்கு ஏற்றுக் கொள்ளத்தக்க தர நியமத்தையும் பேண முடியாமல் உள்ளது. எனவே புதியமுறையை அமுல்படுத்த ஆலோசிக்கின்றது
- வெளிப்புற சக்திகளின் தலையீடு காரணமாக மனித வளத்தின் உச்சப்பயன்பாட்டைப் பெறுதல் இயலாததாக உள்ளது. சபைக்குரிய நிதி நிலை வரம்பு காரணமாக சில செயற்பாடுகள் எல்லைப்படுத்தப்படுவதால் சில பதவிநிலை உத்தியோகத்தர்களின் சேவை குறைந்த அளவிலேயே பயன்படுத்தப்படுகின்றது.
- ஓய்விற்குரிய வயதை அடைந்த உத்தியோகத்தர்களின் சேவை நீடிப்பிற்கான அனுமதி விதி விலக்கான தருணங்களில் மட்டும் வழங்கப்பட்டு, மீள வடிவமைக்கும் நிகழ்ச்சித் திட்டம் செயற்படுத்தப்படுகின்றது.

**ஈ. பணிப்பாளரின் அறிக்கை**

**பொதுவான.**

பனையுடன் தொடர்பான உற்பத்திகளை அபிவிருத்தி செய்வதோடு சமூக மேம்பாட்டையும் மேற்கொள்ளும் ஒரே அரச நிறுவனம் இதுவாகும்.

பிரதான காரியாலயம், யாழ்ப்பாணத்தில் இயங்குகின்றது. பிராந்தியக் காரியாலயங்கள் கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா, அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை, புத்தளம், அம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களில் இயங்குகின்றன.

கொழும்பில் இயங்கும் நகரக் காரியாலயம், பிராந்தியக் காரியாலயங்கள், அமைச்சு, திறைசேரி மற்றும் ஏனைய முக்கிய நிறுவனங்கள் என்பனவற்றை இணைக்கும் காரியாலயமாக செயற்படுகின்றது.

**எதிர்காலத் திட்டங்கள்**

சபையினால் செயற்படுத்தப்பட்ட தொழிற்பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்தை தொழிற்பயிற்சிக்கு உதவும் அரசசார்பற்ற நிறுவனங்கள் அரச நிறுவனங்களின் உதவியோடு முன்னெடுப்பதற்கான அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- 03 வருடமுதலீட்டுத்திட்டம் 2012-2015 களிற்கிடையில் அமுல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.
- யாழ்ப்பாணத்தில் சாற்று உற்பத்தி நிலையத்தை ஆரம்பித்தல்.
- பனங்களி பிரித்தல் தொழிற்சாலையை யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் ஆரம்பித்தல்.
- யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், வவுனியா ஆகிய பண்ணைகளை புனருத்தாரணம் செய்தல்.
- கொள்வனவாளர் இவிற்பனையாளர் இணைப்பு கட்டமைப்பை சந்தைப்படுத்தலிற் செற்படுத்தல்.

**பணிப்பாளர்கள்**

| | | |
|---|---|---|
| 01. திரு.ப.சீவரத்தினம் | - | தலைவர் |
| 02. திரு. த.சிவலிங்கம் | - | பணிப்பாளர் |
| 03. திருமதி. எம்.கங்காதரன் (திறைசேரி) | - | பணிப்பாளர் |
| 04. திரு. ச.சந்துரு | - | பணிப்பாளர் |
| 05. திரு. வ.தேவநாதன் | - | பணிப்பாளர் |
| 06. திரு.வ இராஜலிங்கம் | - | பணிப்பாளர் |
| 07. திரு. கே.பி.ஜெகதீஸ்வரா | - | பணிப்பாளர் |
| 08. திரு. கே.எம்.கமால்டீன் | - | பணிப்பாளர் |
| 09. திரு. பி.இராமச்சந்திரன் | - | பணிப்பாளர் |

## பனை அபிவிருத்திச் சபை

## குறிப்பிடத்தக்க கணக்கியற் கொள்கைகள்

### 1.0 கணக்கியல் மரபுகள்

1:1 திணைக்களத்தின் புதுப்பிக்கப்பட்ட பெறுபேறுகளும் நிதி நிலைமையையும் இலங்கை பட்டய நிறுவனத்தினரால் அடித்தளமிடப்பட்ட பொதுவாக ஏற்றுக்கொள்ளத்தக்க கணக்கியற்கோட்பாடுகள் மற்றும் பிரயோகிக்கக்கூடிய கணக்கியற் தரங்களுக்கமைய தயாரிக்கப்பட்டன. குறிப்பிடத்தக்கவையான காணி, இயந்திர உபகரணங்கள் தவிர்ந்த ஏனைய பாரம்பரியமான கிரய மரபினை அடிப்படையாகக் கொண்டே நிதியியற் கூற்றுகள் தயாரிக்கப்பட்டுள்ளன. கணக்குகளைப் பாதிக்கும் பணவீக்க காரணிகளுக்கு செம்மையாக்கல் செய்யப்படுவதில்லை.

சபையினால் கணக்கியற் கொள்கைகள் தொடர்ச்சியாகப் பிரயோகிக்கப்பட்டுள்ளதோடு, அவை முந்தைய ஆண்டு பாவனையின் தொடர்ச்சியாகவுள்ளது. தேவைப்படுமிடத்து குறிப்பிடத்தக்க கணக்கியற் கொள்கைகளுக்கு பின்வரும் குறிப்புக்களில் விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

### 1:2 கூட்டிணைப்புக் கொள்கைகள்

பொதுவான நிதியாண்டான ஜனவரி 01 முதல் டிசம்பர் 31 வரை சபையின் கூட்டிணைந்த கணக்கியற் கூற்றுகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

### 2:0 சொத்துக்களும் அவற்றின் பெறுமதியின் அடிப்படையும்

### 2:1 காணி, இயந்திரம் மற்றும் உபகரணம்

#### 2:1.1 சொத்துக்கள்

இயந்திரம் மற்றும் உபகரணம் போன்றவை கிரய அல்லது உத்தேச பெறுமதியில் காட்டிய பெறுமானத்தேய்வு கழிக்கப்பட்டு காட்டப்பட்டுள்ளன. சுயமாக சொத்துகள் நிர்மாணிக்கப்பட்ட சொத்துக்களின் பெறுமதியில் பொருட்களின் கிரயம், நேரடிக் கூலி உற்பத்தியின் செலவுகள் சேர்க்கப்பட்டுள்ளன.

#### 2:1.2 மீள / அடுத்துவரும் செலவினங்கள்

இயந்திர உபகரணம் போன்றவற்றின் உதிரிப்பாகத்தை மாற்ற ஏற்படும் உதிரிப்பாக செலவினம் தனியாக மூலதனமாக்கி கணக்கில் காட்டப்பட்டு எழுதி நீக்கப்பட்டது. ஏனைய மீள் வரும் செலவினங்கள் நிலம், இயந்திர உபகரணம் போன்றவற்றின் எதிர்கால பொருளாதார நன்மையை இணைந்து அதிகரிக்கும் பட்சத்தில் மூலதனமயமாக்கப்படும் எல்லா மற்றைய செலவினங்களும் செலவாகக் கணிக்கப்பட்டு வருமானக்கூற்றில் அங்கீகரிக்கப்படும்.

#### 2:1:3 பெறுமானத்தேய்வு

வருமானக்கூற்றில் நிலம் மற்றும் பொருத்துகளுக்கும் உபகரணங்களுக்கும் நிர்ணயிக்கப்பட்ட அவற்றின் கால அளவிற்கேற்ப நேர்கோட்டு முறையில் பெறுமானத்தேய்வு கணிக்கப்பட்டது. பொதுவாக சொத்துக்கள் கீழ் கண்ட கால எல்லைக்குள் எழுதி நீக்கப்படும்.

| | | |
|---|---|---|
| கட்டடம் | - | 10 ஆண்டுகள் |
| இயந்திர உபகரணங்கள் | - | 05 ஆண்டுகள் |
| மோட்டார் வாகனங்கள் | - | 05 ஆண்டுகள் |
| தளபாடங்களும் இணைப்புக்களும் | - | 10 ஆண்டுகள் |
| கணணி மற்றும் ஏனைய பொருத்துக்கள் | - | 05 ஆண்டுகள் |
| மின்சார இணைப்புகள் | - | 10 ஆண்டுகள் |
| அலுவலக மற்றும் பரிசோதனை உபகரணங்கள் | - | 05 ஆண்டுகள் |
| நானாவித சொத்துக்கள் | - | 05 ஆண்டுகள் |

கொள்வனவு செய்யப்பட்ட சொத்துகள் மற்றும் உபகரணங்களுக்கு கொள்வனவு செய்யப்பட்ட ஆண்டில் பெறுமானத்தேய்வு கணிக்கப்பட்டுள்ளது.

## 2:2 இருப்பெடுப்பு (விற்பனைப் பொருட்கள்)

இருப்புக்கள் சந்தைவிலை அல்லது தேறிய கொள்விலையில் இதில் எது குறைவோ அந்தப் பெறுமதியிலே காட்டப்பட்டுள்ளன. தேறிய பெறக்கூடிய பெறுமதியானது சாதாரண வியாபாரத்தின் போது நிர்ணயிக்கப்படும் விற்பனை விலையில் நிர்ணயிக்கப்பட்ட முடிவுற்ற கிரயம் மற்றும் விற்பனைச் செலவுகள் கழிக்கப்பட்டதாகும். இருப்புக்களின் கிரயமானது முதலில் உள்வருவது முதலில் வெளிச்செல்லும் (FIFO) கோட்பாட்டுக்கமைவானது. உற்பத்தி செய்யப்பட்ட இருப்புகளினதும் நடைமுறை வேலைகளினதும் கிரயத்தில் சாதாரண தொழிற்பாடும் ஆற்றலுக்கமைய கணிசமான செலவின் பங்கு சேர்க்கப்பட்டுள்ளது.

## 2:3 காசும் காசிற் சமமானவையும்

கையிருப்பிலுள்ள காசும் குறுகிய கால வைப்புக்களும் காசும் காசிற்கு சமமானவையில் உள்ளடங்கும்.

## 3. பொறுப்புக்களும், ஒதுக்கங்களும்

### ஓய்வுகால உபகார கடப்பாடுகள்

### 3:1:1 நிர்ணயித்த பங்களிப்புத் திட்டங்கள்

இலாப நட்டக் கணக்கில் நிர்ணயிக்கப்பட்ட பங்களிப்புத் திட்டங்கள், ஊழியர் சேமலாப நிதி, நம்பிக்கை நிதி என்பன உட்பட செலவினமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளன. முறையே ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கை நிதி என்பவற்றுக்கு சபையானது மொத்த ஊதியத்தின் 12 வீதம் மற்றும் 3 வீதம் என்ற விகிதத்தில் பங்களிப்புச் செய்கிறது.

### 3:1:2 நிர்ணயிக்கப்பட்ட ஓய்வு கால உபகாரத்திட்டங்கள்

பணிக்கொடை, நிர்ணயிக்கப்பட்ட ஓய்வுகால உபகாரத்திட்டமாகவுள்ளது. அரச சட்டத்திற்கமைய பணிக்கொடை வழங்குவதற்கு சபை கட்டுப்பட்டுள்ளது. இந்தப் பொறுப்பினை ஏற்படும் வகையில் ஐந்தொகையில் ஒவ்வொரு நிதியாண்டின் கடைசி மாதத்தின் அரை மாதச் சம்பளத்தை அனைத்து ஊழியர்களுக்கும் ஒதுக்குவதற்கான ஏற்பாடு முன்னெடுக்கப்படுகிறது. சேவையின் தொடக்க ஆண்டிலிருந்து சேவை முடிவுறும் ஒவ்வொரு ஆண்டும் இக்கணிப்பிற்கு உட்படும்.

எவ்வாறெனினும் 1983 ஆம் ஆண்டின் பணிக்கொடைச் சட்டம் 12 ஆம் இலக்கப்படி சபையில் தொடர்ச்சியாக 5 வருட சேவையைப் பூர்த்தி செய்தால் மட்டுமே இக்கொடுப்பனவு உரித்துடையதாகும்.

**வியாபார மற்றும் கொடுப்பனவுகள்**

வியாபார மற்றும் கொடுப்பனவுகள் அதன் கிரயப் பெறுமதியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 4.0 வருமான கூற்று

## 4.1 வருமானம்

வருமானமும் அதனோடு இணைந்து ஏற்பட்ட செலவுகளும் ஏற்படக்கூடிய செலவுகளும் நம்பத்தக்க வகையில் அளவிட முடியும் எனும் பட்சத்தில் பொருளாதார நன்மைகள் சபைக்கு கிடைக்க அது அமைவாகும் என்பதால் வருமானம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. கீழ்க்கண்ட முக்கிய அணுகுமுறை வருமானத்தை அங்கீகரிக்கப் பயன்படுத்தப்பட்டது.

### (அ) பொருட்களின் விற்பனை

கணிசமான அபாயங்களும் பதிவுகளும் பொருளின் சொந்தக்காரரிடமிருந்து கொள்முதல் செய்பவரிடம் சென்றடையும் போது பொருட்களின் விற்பனை வருமானம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. சேவைகள் முடிவுற்றபின் சேவைகளினால் பெறும் வருமானம் அங்கீகாரம் பெறுகின்றது.

### (ஆ) ஏனைய வருமானம்

சொத்தின் ஏற்புடை பெறுமதியும் அது சார்ந்த விற்பனை செலவுகளும் வெளியகற்றல் பெறுமதியில் கழிக்கப்பட்டு, காணி பொருத்துக்கள் மற்றும் உபகரணங்கள் மற்றும் நடைமுறையற்ற சொத்துக்கள் வெளியகற்றும் போது எற்படும் வருமானத் தன்மை கொண்ட தேறிய இலாபங்களும், நட்டங்களும் கணக்கிலெடுக்கப்பட்டுள்ளன.
ஏனைய வருமானம் உண்மைத் தன்மையுடன் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

பிரதான வருவாய் உருவாக்கும் செயற்பாட்டுக்கு ஆதாயங்கள் மற்றும் நட்டங்கள் ஏற்படுத்தும் தற்செயல் நிகழ்ச்சிச் செயற்பாடுகள் மற்றும் குழுமமான ஒத்த கொடுக்கல் வாங்கல்கள் ஆகியவற்றில் எவை காத்திரமற்றவையோ அவை தேறிய முறையில் சேர்க்கப்பட்டு அறிவிக்கப்பட்டு வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

## 4.2 செலவினம்

வருமானக்கூற்றில் செலவுகள் குறிப்பிட்ட வருமான நிரல்களின் சம்பாத்தியம் மற்றும் அடைந்த கிரயம்/செலவுகளுக்கு இடையிலான நேரடி சம்பந்தத்தை அடிப்படையாகக் கொண்டு அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

வியாபாரத்தை நடாத்துவதிலும் சொத்துக்கள் பொறுப்புக்கள் ஆகியவற்றை திறன் அடிப்படையில் பராமரிப்பதிலும் அடைந்த எல்லாச் செலவுகளும் குறிப்பிட்ட காலப்பகுதியின் இலாப நட்டத்தை ஈட்டும் வருமானத்தில் கட்டணங்களாகக் காட்டப்பட்டுள்ளன.

## 5.0 காசுப் பாய்ச்சல்

| ஊ. சே. நிதி | 698,663.30 | 657,213.33 | 61,315.24 | | 64,392.84 | 34,232.40 | 28,866.24 | 61,913.16 | 67,424.40 | 23,601.74 | 51,292.71 | 66,456.72 | 67,787.28 | 56,943.77 | 58,019.76 | 27,550.80 | 28,866.24 |
| ஊ. நம். நிதி | 174,665.82 | 164,303.33 | 15,328.81 | | 16,098.21 | 8,558.10 | 7,216.56 | 15,478.29 | 16,856.10 | 5,900.43 | 12,823.18 | 16,614.18 | 16,946.82 | 14,235.94 | 14,504.94 | 6,887.70 | 7,216.56 |
| மேலதிக கொடுப்பனவு | 388,078.56 | 525,456.23 | 10,291.90 | 276,869.48 | | | | | 57,563.81 | | | 40,336.75 | | 872.46 | 2,144.16 | | |
| போக்குவரத்து | 92,646.00 | 167,914.61 | | 91,596.00 | | | | | 1,050.00 | | | | | | | | |
| காகிதாதிகள் | 2,432.00 | 22,163.27 | | | | | | | 2,432.00 | | | | | | | | |
| உபசரணைச் செலவுகள் | 157,631.89 | 113,197.00 | | 156,671.89 | | | | | | | | | | 960.00 | | | |
| ஊழியர் நலம் பேணல் | - | - | | | | | | | | | | | | | | | |
| மின்சாரம் | 170,336.41 | 131,227.96 | | | 8,490.00 | 19,820.00 | 3,686.00 | 2,842.50 | 10,586.71 | 4,336.00 | | 12,480.50 | 8,845.52 | 3,204.00 | 77,820.18 | 18,225.00 | |
| தொலைபேசி | - | 33,000.00 | | | | | | | | | | | | | | | |
| வாடகை | 616,124.44 | 401,452.20 | | 158,489.60 | 11,200.00 | | 60,000.00 | 60,983.84 | 77,473.00 | 36,000.00 | 18,000.00 | 79,978.00 | | | 114,000.00 | | |
| நீர்க் கட்டணம் | 4,759.00 | 7,082.72 | | | | | 4,759.00 | | | | | | | | | | |
| இறை வரிகள் | 26,490.50 | 4,070.00 | | | | | 560.00 | | 2,480.00 | | | 1,807.50 | | 20,000.00 | 1,643.00 | | |
| தபால் செலவு | - | - | | | | | | | | | | | | | | | |
| வாகனம் பழுது பார்த்தல் | - | 350.00 | | | | | | | | | | | | | | | |
| கட்டடம் – திருத்த வேலைகள் | 85,990.00 | 989.00 | 30,855.00 | | | | | | | | | 25,580.00 | | 8,015.00 | 19,890.00 | 1,650.00 | |
| உபகரணம் பழுதுபார்த்தல் | 52,075.00 | - | | | | | | | | | | 12,250.00 | | | 39,825.00 | | |
| கட்டடப் பெறுமானத் தேய்வு | 50,772.00 | 33,478.34 | | | | | | | | 33,478.00 | | | | | | 17,294.00 | |
| வாகனப் பெறுமானத் தேய்வு | 86,076.00 | - | 82,320.00 | | | | | | 3,756.00 | | | | | | | | |
| உபகரணப் பெறுமானத்தேய்வு | - | - | | | | | | | | | | | | | | | |
| பராமரித்தல் | 133,786.80 | 103,859.25 | | 68,415.80 | | | | 950.00 | 34,912.00 | | 1,000.00 | 5,324.00 | 2,395.00 | 7,695.00 | 10,585.00 | 2,510.00 | |
| நானாவிதம் | - | 3,631.00 | | | | | | | | | | | | | | | |
| | 8,562,721.85 | 8,112,625.95 | 711,071.28 | 752,042.77 | 636,788.05 | 347,880.50 | 345,639.80 | 658,110.79 | 836,404.02 | 299,997.33 | 510,555.14 | 814,633.62 | 660,868.62 | 586,457.59 | 821,930.04 | 303,707.50 | 276,634.80 |
| விற்பனையும் வழங்கலும் | | | | | | | | | | | | | | | | | |
| விளம்பரம் | 108,725.00 | 46,150.00 | 6,000.00 | 91,725.00 | | | | | | | | 6,000.00 | | | 5,000.00 | | |
| பழுதானவை பதிவழித்தமை | - | - | | - | | | | | | | | | | | | | |
| | 108,725.00 | 46,150.00 | 6,000.00 | 91,725.00 | - | - | - | - | - | - | - | 6,000.00 | - | - | 5,000.00 | - | - |
| மொத்த செலவினம் | 8,671,446.85 | 8,158,775.95 | 717,071.28 | 843,767.77 | 636,788.05 | 347,880.50 | 345,639.80 | 658,110.79 | 836,404.02 | 299,997.33 | 510,555.14 | 820,633.62 | 660,868.62 | 586,457.59 | 826,930.04 | 303,707.50 | 276,634.80 |
| செலவிலும் கூடிய வருமானம் | (3,159,052.48) | (3,940,488.50) | 867,512.75 | (505,607.00) | (563,245.46) | (252,889.70) | (255,135.40) | (591,160.80) | 481,319.53 | (146,060.93) | (458,984.64) | (277,866.12) | (632,370.12) | (79,760.69) | (256,245.70) | (225,854.70) | (262,703.50) |

பனை அபிவிருத்திச் சபை

களஞ்சிய வியாபார இலாப நட்டக் கணக்கு

*குறிப்பு –7* 2011 ஜனவரி முதல் டிசம்பர் வரையிலான காலப்பகுதிக்குரியது

| விபரம் | மொத்தம் **2011** | மொத்தம் **2010** | களஞ்சியம் யாழ்பாணம் | களஞ்சியம் கொழும்பு | களஞ்சியம் மட்டக்களப்பு | களஞ்சியம் மன்னார் | களஞ்சியம் வவுனியா | களஞ்சியம் திருகோணமலை | லுவலக கனஞ்சிய யாழ்ப்பாணம் | களஞ்சியம் கல்முனை |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| விற்பனைப் புரள்வு | *57,925.00* | *78,000.00* | | *57,925.00* | | | | | | |
| | *57,925.00* | *78,000.00* | - | *57,925.00* | - | - | - | - | - | - |
| விற்ற சரக்கின் கொள்விலை | | | | | | | | | | |
| ஆரம்ப சரக்கு இருப்பு | *1,975,115.22* | *1,456,325.80* | *238,850.00* | *1,090,167.50* | *13,640.00* | *5,070.00* | *191,400.00* | *24,748.40* | *411,239.32* | |
| கொள்வனவு | *9,303,144.30* | *11,727,307.25* | *1,747,632.50* | *1,356,141.80* | *1,009,748.00* | *1,462,523.00* | *2,861,554.00* | *314,256.00* | *160,070.00* | *391,219.00* |
| உள்மாற்றம் | *14,519,844.90* | *11,026,461.53* | *4,767,134.00* | *5,678,026.45* | *236,438.95* | *2,722,540.00* | *687,394.00* | *336,523.00* | | *91,788.50* |
| பொதியிடல் செலவினம் | *1,740.00* | *13,050.50* | | | | *1,740.00* | | | | |
| உருவாக்கற் செலவினம் | *25,799,844.42* | *24,223,145.08* | *6,753,616.50* | *8,124,335.75* | *1,259,826.95* | *4,191,873.00* | *3,740,348.00* | *675,527.40* | *571,309.32* | *483,007.50* |
| கழி : உள்ளக மாற்றம் –வெளி | *23,847,722.93* | *22,581,576.97* | *6,333,672.30* | *7,265,477.88* | *1,258,166.95* | *4,049,541.00* | *3,665,167.50* | *660,595.00* | *125,701.30* | *489,401.00* |
| | *1,952,121.49* | *1,641,568.11* | *419,944.20* | *858,857.87* | *1,660.00* | *142,332.00* | *75,180.50* | *14,932.40* | *445,608.02* | *(6,393.50)* |
| கழி : இறுதிச் சரக்கு | *1,935,240.98* | *1,975,115.22* | *420,403.00* | *807,259.20* | *1,660.00* | *157,040.00* | *77,090.00* | *21,006.80* | *450,781.98* | |
| | *16,880.51* | *(333,547.11)* | *(458.80)* | *51,598.67* | - | *(14,708.00)* | *(1,909.50)* | *(6,074.40)* | *(5,173.96)* | *(6,393.50)* |
| மொத்த இலாபம் | *41,044.49* | *411,547.11* | *458.80* | *6,326.33* | - | *14,708.00* | *1,909.50* | *6,074.40* | *5,173.96* | *6,393.50* |
| கூட்டுக : நானாவித வருமானம் | - | - | - | - | | | | | | |
| மொத்த இலாபம் | *41,044.49* | *411,547.11* | *458.80* | *6,326.33* | - | *14,708.00* | *1,909.50* | *6,074.40* | *5,173.96* | *6,393.50* |
| கழி : செலவினம் | | | | | | | | | | |
| நிருவாகமும் நிறுவனமும் | | | | | | | | | | |
| சம்பளம் | *2,144,255.25* | *3,283,410.83* | *1,116,585.00* | | | | *532,480.50* | | *495,189.75* | |
| ஊ. சே. நிதி | *257,310.63* | *394,009.30* | *133,990.20* | | | | *63,897.66* | | *59,422.77* | |
| ஊ. நம். நிதி | *64,327.66* | *98,502.33* | *33,497.55* | | | | *15,974.42* | | *14,855.69* | |
| மேலதிக கொடுப்பனவு | *1,672.94* | - | | *1,672.94* | | | | | | |
| போக்குவரத்து | *1,975.00* | *13,934.00* | | *1,975.00* | | | | | | |
| காகிதாதிகள் | - | *13,275.65* | | | | | | | | |
| உபசரணைச் செலவுகள் | *1,360.00* | *160.00* | *1,000.00* | *360.00* | | | | | | |
| ஊழியர் நலம் பேணல் | - | | | | | | | | | |
| மின்சாரம் | *6,915.00* | *27,972.00* | *6,915.00* | | | | | | | |
| தொலைபேசி | - | | | | | | | | | |
| வாடகை | *10,000.00* | *59,000.00* | *10,000.00* | | | | | | | |
| நீர்க் கட்டணம் | - | - | | | | | | | | |
| இறை வரிகள் | - | - | | | | | | | | |
| தபால் செலவு | - | | | | | | | | | |
| வாகனம் பழுது பார்த்தல் | *2,160.00* | | *2,160.00* | | | | | | | |
| கட்டடம் – திருத்த வேலைகள் | - | - | | | | | | | | |
| உபகரணம் பழுதுபார்த்தல் | - | - | | | | | | | | |
| கட்டடப் பெறுமானத் தேய்வு | - | | | | | | | | | |
| வாகனப் பெறுமானத் தேய்வு | *3,756.00* | | *3,756.00* | | | | | | | |
| உபகரணப் பெறுமானத்தேய்வு | - | | | | | | | | | |
| பராமரித்தல் | *64,274.00* | *8,552.50* | *5,582.00* | *1,865.00* | | *53,307.00* | | | | *3,520.00* |
| நானாவிதம் | - | *701.00* | | | | | | | | |
| | *2,558,006.48* | *3,899,517.61* | *1,313,485.75* | *5,872.94* | - | *53,307.00* | *612,352.58* | - | *569,468.21* | *3,520.00* |
| விற்பனையும் வழங்கலும் | - | | | | | | | | | |
| விளம்பரம் | *47,880.00* | *18,540.00* | | *47,880.00* | | | | | | |
| போக்குவரத்து | *158,561.00* | *126,333.00* | *46,503.00* | *108,511.00* | | | | | | *3,547.00* |
| பழுதானவை பதிவழித்தமை | - | *6,540.00* | | | | | | | | |
| | *206,441.00* | *151,413.00* | *46,503.00* | *156,391.00* | - | - | - | - | - | *3,547.00* |
| மொத்த செலவினம் | *2,764,447.48* | *4,050,930.61* | *1,359,988.75* | *162,263.94* | - | *53,307.00* | *612,352.58* | - | *569,468.21* | *7,067.00* |
| செலவிலும் கூடிய வருமானம் | *(2,723,402.99)* | *(3,639,383.50)* | *(1,359,529.95)* | *(155,937.61)* | - | *(38,599.00)* | *(610,443.08)* | *6,074.40* | *(564,294.25)* | *(673.50)* |

குறிப்பு 8

| விபரம் | 2011 | 2010 | குடத்தனை | மாமுனை | நெடுந்தீவு | புளியங்குளம் | நறுவிலிக்குளம் | வீரவில |
|---|---|---|---|---|---|---|---|---|
| விற்பனைப் புரள்வு | 170,749.00 | 166,973.00 | | | | | | 170,749.00 |
| | 170,749.00 | 166,973.00 | - | - | - | - | - | 170,749.00 |
| கழி: | | | | | | | | |
| பராமரிப்புச் செலவு | - | | | | | | | |
| நடுகை | 37,872.00 | 36,848.00 | 18,800.00 | | | | | 19,072.00 |
| உரம் | - | 3,690.00 | | | | | | |
| எரிபொருள் – டிராக்டர் | 1,650.00 | 7,778.08 | | | | | | 1,650.00 |
| பழுதுபார்த்தலும், பாராமரிப்புக் கருவிகளும் | - | - | | | | | | |
| பெறுமானத்தேய்வு | - | | | | | | | |
| உபகரணம் | - | - | | | | | | |
| கட்டடம் | 585,046.50 | 458,580.00 | 86,075.00 | 270,197.00 | - | 170,850.00 | - | 57,924.50 |
| தளபாடங்களும் பொருத்துக்களும் | - | - | | | | | | |
| மொத்தம் | 624,568.50 | 506,896.08 | 104,875.00 | 270,197.00 | - | 170,850.00 | - | 78,646.50 |
| கழி:: உள்ளக மாறுதல் | - | 40,575.00 | - | - | - | - | - | - |
| விற்பனைக் கிரயம் | 624,568.50 | 466,321.08 | 104,875.00 | 270,197.00 | - | 170,850.00 | - | 78,646.50 |
| மொத்த இலாபம் | (453,819.50) | (299,348.08) | (104,875.00) | (270,197.00) | - | (170,850.00) | - | 92,102.50 |
| கூட்டுக : நானாவித வருமானம் | - | | | | | | | - |
| மொத்த இலாபம் | (453,819.50) | (299,348.08) | (104,875.00) | (270,197.00) | - | (170,850.00) | - | 92,102.50 |
| நிருவாக நிறுவனச் செலவுகள் | | | | | | | | |
| சம்பளம் | 2,136,292.33 | 1,785,720.00 | 322,911.00 | 241,326.00 | 236,851.33 | | | 1,335,204.00 |
| ஊ. சே. நிதி | 248,995.08 | 214,286.40 | 33,349.32 | 28,959.12 | 26,462.16 | | | 160,224.48 |
| ஊ. நம். நிதி | 62,248.77 | 53,571.60 | 8,337.33 | 7,239.78 | 6,615.54 | | | 40,056.12 |
| மேலதிக கொடுப்பனவு | 9,379.80 | - | 6,509.00 | 2,870.80 | | | | |
| போக்குவரத்து | 4,569.80 | - | 4,569.80 | | | | | |
| காகிதாதிகள் | - | 461.20 | | | | | | |
| உபசரணைச் செலவுகள் | 122.00 | - | 122.00 | | | | | |
| தொலைபேசி | - | - | | | | | | |
| வாகனச் செலவு | - | - | | | | | | |
| தபால் செலவு | - | - | | | | | | |
| பழுது பார்த்தல் | - | - | | | | | | |
| விற்பனைப் புரள்வு வரி | - | - | | | | | | |
| பராமரிப்பு | 168,905.00 | 41,613.64 | 9,429.00 | 150,000.00 | | | | 9,476.00 |
| நானாவிதம் | - | 4,237.00 | | | | | | |
| | 2,630,512.78 | 2,099,889.84 | 385,227.45 | 430,395.70 | 269,929.03 | - | - | 1,544,960.60 |
| மொத்தச் செலவு | 3,255,081.28 | 2,606,785.92 | 490,102.45 | 700,592.70 | 269,929.03 | 170,850.00 | - | 1,623,607.10 |
| செலவிலும் கூடிய வருமானம் | (3,084,332.28) | (2,399,237.92) | (490,102.45) | (700,592.70) | (269,929.03) | (170,850.00) | - | (1,452,858.10) |

குறிப்பு 9 திணைக்கள கணக்குகள்

## 2011ஜனவரி முதல் டிசம்பர் வரையிலான காலப்பகுதிக்குரியது

| விபரம் | 2011 | 2010 | அபிவிருத்தி | ஆராய்ச்சி |
|---|---|---|---|---|
| விற்பனைப் புரள்வு | - | - | - | |
| | - | - | - | - |
| ஆரம்ப சரக்கு இருப்பு | - | - | | |
| கொள்வனவு | - | - | | |
| உள்ளக மாற்றம் | 166,236.43 | 9,724.80 | 2,420.43 | 163,816.00 |
| பெறுமானத் தேய்வு | - | | | |
| உபகரணங்கள் | - | - | | |
| | 166,236.43 | 9,724.80 | 2,420.43 | 163,816.00 |
| வெளி மாற்றங்கள் | - | - | - | - |
| | 166,236.43 | 9,724.80 | 2,420.43 | 163,816.00 |
| கழி : இறுதி சரக்கிருப்பு | - | - | | |
| விற்பனைக் கிரயம் | **166,236.43** | **9,724.80** | **2,420.43** | **163,816.00** |
| மொத்த இலாபம் | **(166,236.43)** | **(9,724.80)** | **(2,420.43)** | **(163,816.00)** |
| கூட்டுக : நானாவித வருமானம் | 5,437,850.00 | | **5,437,850.00** | |
| மொத்த இலாபம் | **5,271,613.57** | **(9,724.80)** | **5,435,429.57** | **(163,816.00)** |
| சம்பளம் | 2,224,947.93 | 1,031,737.70 | 789,288.42 | 1,435,659.51 |
| ஊ. சே. நிதி | 266,993.75 | 123,808.52 | 94,714.61 | 172,279.14 |
| ஊ. நம். நிதி | 66,748.44 | 30,952.13 | 23,678.65 | 43,069.79 |
| மேலதிக நேரம் | 25,619.99 | 3,656.00 | 13,115.97 | 12,504.02 |
| பயிற்சி செலவு | 23,810.00 | - | | 23,810.00 |
| பிரயாணம் | 382,446.37 | 57,963.84 | 297,619.87 | 84,826.50 |
| காகிதாதிகள் | 4,320.00 | 15,250.00 | | 4,320.00 |
| மின்சாரம் | 23,107.50 | - | | 23,107.50 |
| வாடகை | 159,770.32 | - | | 159,770.32 |
| உபசரணைச் செலவுகள் | 45,414.00 | 7,452.00 | 11,434.00 | 33,980.00 |
| ஊழியர் நலம் பேணல் | 2,900.00 | - | 2,900.00 | |
| பழுதுபார்த்தல் | 13,250.00 | - | 7,000.00 | 6,250.00 |
| வாகனச் செலவு | 53,000.00 | 58,934.00 | 7,000.00 | 46,000.00 |
| பராமரித்தல் | 88,486.00 | - | | 88,486.00 |
| நானாவித செலவுகள் | 209,485.40 | 5,000.00 | 95,195.20 | 114,290.20 |
| மொத்தம் | 3,590,299.70 | 1,334,754.19 | 1,341,946.72 | 2,248,352.98 |
| வருமானத்திலும் கூடிய செலவீனம் | 1,681,313.87 | (1,344,478.99) | 4,093,482.85 | (2,412,168.98) |

## விரிவாக்கல் மற்றும் பயிற்ச்சியளித்தல் பகுதி

| விபரம் | 2011 | 2010 | யாழ்ப்பாணம் | மட்டக்களப்பு | கல்முனை | திருகோணமலை | வவுனியா | கிளிநொச்சி | முல்லைத்தீவு | மன்னார் | கொழும்பு | புத்தளம் | அம்பாந்தோட்டை | அனுராதபுரம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| விற்பனைப் புரள்வு | - | - | - | - | | | | | | | - | | | |
| | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| ஆரம்ப சரக்கு இருப்பு | - | - | - | | | | | | | | | | | |
| கொள்வனவு | 97,429.00 | 92,606.00 | 23,010.00 | | 580.00 | 22,500.00 | 35,760.00 | 900.00 | | | 10,379.00 | 4,300.00 | | |
| உள்ளக மாற்றம் | 22,722.50 | 20,620.00 | 3,370.00 | | | | | | | | 5,670.00 | 13,682.50 | | |
| பெறுமானத் தேய்வு | - | | | | | | | | | | | | | |
| உபகரணங்கள் | - | - | | | | | | | | | | | | |
| | 120,151.50 | 113,226.00 | 26,380.00 | - | 580.00 | 22,500.00 | 35,760.00 | 900.00 | - | - | 16,049.00 | 17,982.50 | - | - |
| வெளி மாற்றங்கள் | - | 41,946.00 | - | | - | | | | | - | - | | | |
| | 120,151.50 | 71,280.00 | 26,380.00 | - | 580.00 | 22,500.00 | 35,760.00 | 900.00 | - | - | 16,049.00 | 17,982.50 | - | - |
| கழி : இறுதி சரக்கிருப்பு | - | - | - | | | | | | | | | | | |
| விற்பனைக் கிரயம் | **120,151.50** | **71,280.00** | **26,380.00** | **-** | **580.00** | **22,500.00** | **35,760.00** | **900.00** | **-** | **-** | **16,049.00** | **17,982.50** | **-** | **-** |
| மொத்த இலாபம் | **(120,151.50)** | **(71,280.00)** | **(26,380.00)** | **-** | **(580.00)** | **(22,500.00)** | **(35,760.00)** | **(900.00)** | **-** | **-** | **(16,049.00)** | **(17,982.50)** | **-** | **-** |
| கூட்டுக : நானாவித வருமானம் | 1,025,350.00 | | - | **525,000.00** | **62,350.00** | **192,000.00** | **156,000.00** | **90,000.00** | | | | | | |
| மொத்த இலாபம் | **905,198.50** | **(71,280.00)** | **(26,380.00)** | **525,000.00** | **61,770.00** | **169,500.00** | **120,240.00** | **89,100.00** | **-** | **-** | **(16,049.00)** | **(17,982.50)** | **-** | **-** |
| சம்பளம் | 13,189,476.51 | 11,965,634.63 | 2,401,436.16 | 2,920,549.38 | 1,141,871.68 | 1,347,950.84 | 825,574.50 | 264,366.00 | 313,254.00 | 1,096,083.00 | | 750,069.00 | 1,352,359.95 | 775,962.00 |
| ஊ. சே. நிதி | 1,580,337.18 | 1,447,432.96 | 288,172.34 | 350,465.93 | 134,624.60 | 161,754.10 | 99,068.94 | 31,723.92 | 37,590.48 | 131,529.96 | | 90,008.28 | 162,283.19 | 93,115.44 |
| ஊ. நம். நிதி | 393,476.99 | 361,858.24 | 72,043.08 | 87,616.48 | 33,656.15 | 40,438.53 | 24,767.24 | 7,930.98 | 9,397.62 | 32,882.49 | | 22,502.07 | 38,963.49 | 23,278.86 |
| மேலதிக நேரம் | 21,749.20 | 21,914.01 | 12,252.40 | | 4,993.00 | 4,503.80 | | | | | | | | |
| பயிற்சி செலவு | 3,761,815.00 | (173,939.11) | 2,575,429.00 | 438,830.00 | 118,550.00 | 189,749.00 | 160,000.00 | 7,167.00 | | 195,708.00 | 65,000.00 | | | 11,382.00 |
| பிரயாணம் | 316,853.50 | 152,336.40 | 179,715.00 | 97,760.50 | 3,000.00 | 9,052.00 | | 1,960.00 | | 23,356.00 | | | | 2,010.00 |
| காகிதாதிகள் | 15,075.00 | - | 15,075.00 | | | | | | | | | | | |
| மின்சாரம் | 8,107.50 | - | 8,107.50 | | | | | | | | | | | |
| வாடகை | 120,000.00 | - | 120,000.00 | | | | | | | | | | | |
| உபசரணைச் செலவுகள் | 175,818.01 | 47,067.00 | 122,360.00 | 43,123.50 | 2,403.00 | 7,931.51 | | | | | | | | |
| ஊழியர் நலம் பேணல் | - | - | | | | | | | | | | | | |
| பழுதுபார்த்தல் | 34,800.00 | - | 34,800.00 | | | | | | | | | | | |
| வாகனச் செலவு | 65,232.00 | 10,650.00 | 17,750.00 | 5,842.00 | 14,136.00 | 8,679.00 | 2,650.00 | 13,200.00 | | 2,975.00 | | | | |
| பராமரித்தல் | 13,580.00 | - | 12,420.00 | | | | 1,160.00 | | | | | | | |
| நானாவித செலவுகள் | 320,720.00 | 3,940.00 | 320,720.00 | | | | | | | | | | | |
| மொத்தம் | 20,017,040.89 | 13,836,894.13 | 6,180,280.48 | 3,944,187.79 | 1,453,234.43 | 1,770,058.78 | 1,113,220.68 | 326,347.90 | 360,242.10 | 1,482,534.45 | 65,000.00 | 862,579.35 | 1,553,606.63 | 905,748.30 |
| வருமானத்திலும் கூடிய செலவீனம் | (19,111,842.39) | (13,908,174.13) | (6,206,660.48) | (3,419,187.79) | (1,391,464.43) | (1,600,558.78) | (992,980.68) | (237,247.90) | (360,242.10) | (1,482,534.45) | (81,049.00) | (880,561.85) | (1,553,606.63) | (905,748.30) |

### நானாவித வருமானம்

குறிப்பு 11

| விபரம் | | 2011 | 2010 |
|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | 1 | 201,862.12 | 522,398.80 |
| மட்டக்களப்பு | 2 | 5,537.55 | 6,375.97 |
| கல்முனை | 3 | 592.31 | 22,675.18 |
| திருகோணமலை | 4 | 1,838.07 | 1,565.72 |
| வவுனியா | 5 | 2,515.93 | 23,981.63 |
| கிளிநொச்சி | 6 | 2,425.02 | - |
| முல்லைத்தீவு | 7 | | - |
| மன்னார் | 8 | 11,853.29 | 15,204.80 |
| கொழும்பு | 9 | 2,566,266.65 | 78,131.25 |
| புத்தளம் | 10 | 514.54 | 3,945.88 |
| | 11 | 2,020.00 | - |
| நானாவிதம் | | 2,795,425.48 | 674,279.23 |

## மாவட்ட நிர்வாக மற்றும் நிறுவனச் செலவுகள்

குறிப்பு 13 2011 ஜனவரி முதல் டிசம்பர் வரையிலான காலப்பகுதிக்குரியது

| விபரம் | மொத்தம் 2011 | மொத்தம் 2010 | தலைமை அலுவலகம் யாழ்ப்பாணம் | பிராந்திய அலுவலகம் மட்டக்களப்பு | பிராந்திய அலுவலகம் கல்முனை | பிராந்திய அலுவலகம் திருகோணமலை | பிராந்திய அலுவலகம் வவுனியா | பிராந்திய அலுவலகம் கிளிநொச்சி | பிராந்திய அலுவலகம் முல்லைத்தீவு | பிராந்திய அலுவலகம் மன்னார் | நகர அலுவலகம் கொழும்பு | பிராந்திய அலுவலகம் புத்தளம் | பிராந்திய அலுவலகம் அம்பாந்தோட்டை |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| சம்பளமும் கூலியும் | 20,796,036.16 | 17,182,026.08 | 7,539,880.29 | 1,757,734.00 | 787,094.56 | 800,595.00 | 1,151,208.00 | 834,035.67 | 408,004.42 | 870,273.00 | 5,100,330.68 | 771,332.67 | 775,547.87 |
| ஊ. சே. நிதி | 2,429,072.05 | 1,970,235.79 | 842,293.35 | 210,928.08 | 94,451.35 | 96,071.40 | 138,144.96 | 96,124.28 | 48,960.53 | 104,432.76 | 612,039.68 | 92,559.92 | 93,065.74 |
| ஊ. நம். நிதி | 607,268.02 | 491,817.97 | 210,573.34 | 52,732.02 | 23,612.84 | 24,017.85 | 34,536.24 | 24,031.07 | 12,240.13 | 26,108.19 | 153,009.92 | 23,139.98 | 23,266.44 |
| மேலதிக நேரக் கொடுப்பனவு | 301,442.23 | 197,698.59 | 200,570.87 | | | | 2,012.58 | 2,209.20 | | | 96,649.58 | | |
| சபை அங்கத்தவர் செலவு | 662,351.39 | 293,597.56 | 108,352.50 | 37,540.00 | | 64,610.00 | 8,325.00 | 18,250.00 | 2,500.00 | 35,095.00 | 352,803.89 | 31,875.00 | 3,000.00 |
| பிரயாணப் படி | 865,394.02 | 868,714.93 | 341,246.22 | 14,628.00 | 18,997.50 | 15,276.00 | 31,880.00 | 18,860.90 | 14,389.50 | 13,041.00 | 330,426.00 | 39,316.90 | 27,332.00 |
| காகிதாதிகள் அச்சிடல் | 903,150.13 | 564,118.38 | 633,416.02 | 17,300.63 | 18,309.00 | 17,985.00 | 7,062.00 | 2,498.00 | | 23,471.00 | 175,423.48 | 2,295.00 | 5,390.00 |
| தொலைபேசி | 683,903.18 | 647,601.52 | 251,603.88 | 46,211.14 | 47,853.58 | 13,335.00 | 87,378.90 | 11,000.00 | 1,000.00 | 16,314.87 | 198,303.81 | 10,002.00 | 900.00 |
| வாடகை | 5,563,678.00 | 3,114,832.00 | 312,000.00 | | 74,750.00 | | 71,376.00 | 10,000.00 | | 112,000.00 | 4,983,552.00 | | |
| இறை வரிகள் | - | | | | | | | | | | | | |
| ஊழியர் நலம் பேணல் | 39,810.00 | 63,866.33 | 27,360.00 | | | | | | | | 12,450.00 | | |
| உபசரணைச் செலவுகள் | 355,600.61 | 260,823.11 | 145,944.60 | 986.00 | 610.00 | 800.00 | 340.00 | 4,971.00 | | 26,674.00 | 153,260.01 | 12,082.00 | 9,933.00 |
| மின்சாரம் | 710,358.92 | 815,843.52 | 212,069.92 | 28,496.50 | 7,697.00 | 6,203.00 | 5,944.00 | | | 6,589.00 | 419,794.00 | 14,523.00 | 9,042.50 |
| நீர்வழங்கல் | 70,335.74 | 28,824.12 | 6,000.00 | | 5,152.50 | | | | | 7,950.00 | 47,098.24 | 4,135.00 | |
| வழக்குச் செலவுகள் | 4,500.00 | 64,275.00 | 1,500.00 | | | | 3,000.00 | | | | | | |
| தபால்ச் செலவு | 74,099.00 | 64,763.00 | 18,335.00 | 2,800.00 | 6,750.00 | 5,645.00 | 4,825.00 | 1,490.00 | | 1,450.00 | 18,765.00 | 2,010.00 | 12,029.00 |
| புதினப் பத்திரிகைகள் மற்றும் சஞ்சிகைகள் | 22,794.00 | 24,445.00 | 8,064.00 | | | | | | | | 14,730.00 | | |
| பழுது பார்த்தலும் பராமரித்தலும் | - | | | | | | | | | | | | |
| வாகனம் | 744,755.88 | 718,204.48 | 410,989.92 | 36,202.97 | | 6,158.89 | 850.00 | 1,690.00 | | 1,800.00 | 285,924.10 | 1,140.00 | |
| நானாவித சொத்துக்கள் | - | 2,000.00 | | | | | | | | | | | |
| கட்டடம் | 80,829.00 | 60,772.00 | 7,850.00 | | | | | | | 45,175.00 | 26,890.00 | 914.00 | |
| அலுவலக உபகரணம் | 315,365.54 | 141,112.67 | 107,779.02 | 3,350.00 | 5,250.00 | 37,066.42 | | | | | 161,920.10 | | |
| வாகனத்திற்கான எரிபொருள் | 1,058,767.52 | 761,640.26 | 736,143.82 | 55,348.80 | | 10,200.00 | 2,250.00 | 10,707.20 | 9,285.20 | 13,990.50 | 204,336.00 | 2,926.00 | 13,580.00 |
| கணக்காய்வுக் கட்டணம் | 100,000.00 | 75,000.00 | 100,000.00 | | | | | | | | | | |
| ஓய்வுகாலப் பணம் | 3,597,959.38 | 1,587,697.50 | 3,597,959.38 | | | | | | | | | | |
| பெறுமானத் தேய்வு | - | | | | | | | | | | | | |
| கட்டடம் | 779,099.50 | 699,317.00 | 444,783.00 | - | - | - | | 53,990.00 | | 80,877.00 | | 141,525.00 | 57,924.50 |
| தளபாடமும் இணைப்புக்களும் | 723,555.21 | 379,282.00 | 514,344.04 | 209,211.17 | - | - | - | | | - | - | | - |
| அலுவலக உபகரணம் | 2,462,178.94 | 1,709,911.46 | 487,138.58 | | 24,446.79 | 48,894.84 | 44,385.29 | 30,340.80 | | 169,908.48 | 1,155,484.80 | 132,429.88 | 369,149.48 |
| வாகனம் | 340,096.00 | 524,864.82 | 203,200.00 | 14,200.80 | | 14,200.80 | 14,200.80 | 14,200.80 | | 14,200.80 | 65,892.00 | | |
| பராமரித்தல் செலவு | 266,456.07 | 211,775.99 | 66,534.00 | 26,998.60 | 4,197.00 | 14,299.00 | 12,382.00 | 29,405.00 | 5,712.00 | 49,850.50 | 45,069.97 | 7,140.00 | 4,868.00 |
| நானாவித செலவினம் | - | 37,720.00 | | | | | | | | | | | |
| | 44,558,856.49 | 33,562,781.08 | 17,535,931.75 | 2,514,668.71 | 1,119,172.12 | 1,175,358.20 | 1,620,100.77 | 1,163,803.92 | 502,091.78 | 1,619,201.10 | 14,614,153.26 | 1,289,346.35 | 1,405,028.53 |
| <u>நிதிச் செலவுகள்</u> | | | | | | | | | | | | | |
| குறிப்பு 13 | **2011** | **2010** | | | | | | | | | | | |
| வங்கிச் செலவு | 72,306.78 | 146,817.66 | 66,872.99 | | | | | | | | 5,433.79 | | |
| | 72,306.78 | 146,817.66 | **66,872.99** | - | - | - | - | - | - | - | **5,433.79** | - | - |
| ஏனைய செலவினம் | | | | | | | | | | | | | |
| குறிப்பு 14 | **2011** | **2010** | | | | | | | | | | | |
| விளம்பரம் | 169,488.40 | 726,330.85 | 118,383.00 | | | | | | | 6,300.00 | 44,805.40 | | |
| அறவிட முடியாக்கடன் | - | 25,949.35 | | | | | | | | | - | | |
| வாகனச்செலவு | 62,861.00 | 169,091.00 | 2,950.00 | 6,298.00 | 3,675.00 | 2,505.00 | 28,207.00 | 12,600.00 | | 6,626.00 | | | |
| | 232,349.40 | 921,371.20 | 121,333.00 | 6,298.00 | 3,675.00 | 2,505.00 | 28,207.00 | 12,600.00 | - | 12,926.00 | 44,805.40 | - | - |
| மொத்தச் செலவினம் | 44,863,512.67 | 34,630,969.94 | 17,724,137.74 | 2,520,966.71 | 1,122,847.12 | 1,177,863.20 | 1,648,307.77 | 1,176,403.92 | 502,091.78 | 1,632,127.10 | 14,664,392.45 | 1,289,346.35 | 1,405,028.53 |

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT


මගේ අංකය / எனது இல / **MyNo.** NN/JF/C/ PDB/ FS/2011

ඔබේ අංකය / உமது இல / **No.**

දිනය / திகதி / **Date** 26 September 2012

09 OCT 2012

The Chairman

Palmyrah Development Board.

**Report of the Auditor General on the financial statements of the Palmyrah Development Board for the year ended 31 December 2011 in terms of Section 14(2)(c) of the Finance Act No. 38 of 1971.**

---

With reference to my letter of even number dated 09 August 2011 on the above subject.

The Tamil version of the above mentioned report is sent herewith.

H.A.S. Samaraweera

Auditor General

**Copies:** 1. Secretary, Ministry of Traditional Industries and small Enterprises Development.

2. Secretary, Ministry of finance and Planning


අංක 306/72 පොල්දුව පාර, බත්තරමුල්ල , ශ්‍රී ලංකාව
இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை இலங்கை
No.306/72, Polduwa Road, Battaramulla , Sri Lanka

දුරකථනය / தொலைபேசி / Telephone 0112887028 -34
ෆැක්ස් අංකය / பக்ஸ் இல / Fax No. 2887223
ඉලෙක්ට්‍රොනික් තැපැල් / ஈ- மெயில் / E-mail oaggov@sltnet.lk

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය
எனது இல
MyNo. என்என்/ஜேஎப்/சீ/பிடீபீ/எவ்எஸ்/2011

ඔබේ අංකය
உமது இல
No.

දිනය
திகதி
Date 2012 ஆகஸ்ட் 09

09 OCT 2012 JAFFNA

தலைவர் பனை,

அபிவிருத்திச் சபை.

**பனை அபிவிருத்திச் சபையின் 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1971 இன் 38 ம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

பனை அபிவிருத்திச் சபையின் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக்கூற்று, உரிமை மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று என்பவற்றுடன் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு மற்றும் பிற விளக்கத் தகவல்கள் என்பவற்றினையுள்ளடக்கியிருந்த 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 1971 இன் 38 ம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) ஆம் பிரிவின் பிரகாரம் சபையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச் சட்டத்தின் 13(7)(ஏ) ஆம் பிரிவின் பிரகாரம் ஒரு விரிவான அறிக்கை 2012 ஏப்ரல் 27 ஆம் திகதி சபையின் தலைவருக்கு சமர்ப்பிக்கப்பட்டது.

1.2 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்கள் மற்றும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கிணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

අංක 306/72 පොල්දුව පාර, බත්තරමුල්ල , ශ්‍රී ලංකාව
இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை இலங்கை
No.306/72, Polduwa Road, Battaramulla , Sri Lanka
දුරකථනය / தொலைபேசி / Telephone 0112887028 -34
ෆැක්ස් අංකය / பக்ஸ் இல / Fax No. 2887223
ඉලෙක්ට්‍රොනික් තැපැල් / ஈ- மெயில் / E-mail oaggov@sltnet.lk

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்த நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுக் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளினை கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்துக்கான அடிப்படை

இவ் அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ள தாக்கப்பட்டுள்ளது.

2. நிதிக்கூற்றுக்கள்

2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் காட்டப்பட்டவாறான விடயங்களால் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களை தவிர, 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பனை அபிவிருத்திச் சபையின் நிலைவரம் மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் நிதிசார் செயலாற்றல் மற்றும் காசோட்டம் என்பவற்றை உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் இலங்கை கணக்கீட்டு நியமங்கள் மற்றும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்கியதாக நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்று நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்தரைகள்

2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள் (இ.க.நி)

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதிக்கூற்றுக்கள் இ.க.நி இல. 03 இற்கமைவாகத் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இ.க.நி இற்கமைவாக ஐந்தொகையிலுள்ள விடயங்கள் மற்றும் குறிப்புக்கள் நிதிக்கூற்றுக்களில் பொருத்தமான முறையில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பனை அபிவிருத்திச்சபை உற்பத்தி செயற்பாடுகளில் ஈடுபட்டிருந்த போதிலும் இ.க.நி. இல. 05 இன் பிரகாரம் இருப்புக்களின் சேர்மானம் வெவ்வேறாகப் பெறுமதியிடப்பட்டிருக்கவில்லை.

(இ) புத்தகப் பெறுமதி பூச்சியமாகக் காணப்பட்டதும் தொடர்ந்தும் பாவிக்கப்பட்டு வருகின்றதுமான நிலையான சொத்துக்கள் இ.க.நி. இல. 18 இன் படி மீள விலைமதிக்கப்பட்டு கணக்குகளில் காட்டப்பட்டிருக்கவில்லை.

(ஈ) சபை மீளாய்வாண்டின்போது ரூபா 1,889,901 இற்கு விதைகளைக் கொள்வனவு செய்திருந்தது. எனினும் இ.க.நி இல. 32 இற்கு அமைவாக அகற்றும் நோக்கத்துடன் விதைகள் உயிரியல் பரிசோதனைக்கு உட்படுத்தி பதிவழிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 கணக்கீட்டு குறைபாடுகள்

கணக்காய்வில் பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) ரூபா 27,500 இற்கு பெறுமதியில் நான்கு உறுப்பினரின் பெயர்ப் பலகைகள் மூலதனச் செலவினத்திற்குப் பதிலாக மீண்டெழும் செலவினமாகச் சாட்டுதல் செய்யப்பட்டிருந்தது.

(ஆ) கோண்டாவில் மற்றும் சங்கானையிலமைந்துள்ள ஐக்கரி நிலைய கட்டிடங்கள் முறையே ரூபா 1,170,371 உம் ரூபா 1,184,782 உம் கட்டடங்கள் கணக்குகளில் மூலதனமாக்கப்பட்டிருந்தது. எனினும் காணிகள் சபைக்கு உடமையாக இருக்கவில்லை.

(இ) காரைநகரில் அமைந்துள்ள ரூபா 2,787,681 கிரயம் கொண்ட கைத்தொழில் கட்டடத் தொகுதி, நெடுந்தீவில் அமைந்துள்ள ரூபா 1,131,225 கிரயம் கொண்ட பைபர் நிலையம் என்பன கட்டடக் கணக்குகளில் மூலதனமாக்கப்பட்டிருந்தது. எனினும் காணிகள் சபைக்கு உடமையாக இருக்கவில்லை.

(ஈ) நிதியாண்டு முடிவில் வழியிலிருந்த உற்பத்தி மற்றும் விற்பனை நிலையங்களிலிருந்தான அனுப்படுகின்ற ரூபா 50,199 தொகை இது வழியிற் காசு கணக்கிற்கு வரவு வைக்கப்படுவதற்குப் பதிலாக கடன்பட்டோராக கருதப்பட்டிருந்தது.

### 2.2.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முறையே ரூபா 457,519 மற்றும் ரூபா 7,313,394 கூட்டு மொத்தமான கடன்பட்டோரிடமிருந்தும் கடன் கொடுத்தோரிடமிருந்தும் உறுதிப்படுத்தல்கள் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும் அவற்றை உரிய காலத்தில் அறவிடுவதற்கோ அல்லது தீர்ப்பனவு செய்வதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ரூபா 51,241 தொகை பதவியணியினர் கடன்கள் கடந்த ஐந்து ஆண்டுகளுக்கு மேலாக நிலுவையாகக் காணப்பட்டதுடன் இது தொடர்பில் பின் தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2008 ஆம் ஆண்டின்போது பதவியினை இராஜினாமா செய்திருந்த சபை உறுப்பினரொருவரிடமிருந்து கிடைக்க வேண்டியிருந்த ரூபா 53,730 தொகை தொடப்புட்ட பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரிடமிருந்து முறையான அங்கீகாரம் பெறப்படாமல் 2011 இல் பதிவழிக்கப்பட்டிருந்தது.

(ஈ) கொழும்பு அலுவலகக் கட்டடத்தின் ஒரு பகுதி சமூக சேவைகள் அமைச்சிற்கு உப குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. ஆனால் நிலுவையாகக் காணப்பட்ட ரூபா 1,220,000 வாடகைப் பணம் தொடப்புபட்ட தரப்பினர்களிடமிருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை. எனினும் இத் தொகை தொடர்புபட்ட பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் முறையான அங்கீகாரம் பெறப்படாமல் 2011 இல் பதிவழிக்கப்பட்டிருந்தது.

(உ) இரத்மலானையிலுள்ள கட்டடம் 1999 இல் வெறுமையாக்கப்பட்டிருந்த போதிலும் கட்டடத்திற்காகச் செலுத்தியிருந்த ரூபா 75,000 தொகையான வாடகை வைப்பு தொடர்புபட்ட பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் முறையான அங்கீகாரம் பெறப்படாமல் பதிவழிக்கப்பட்டிருந்தது.

(ஊ) 'திக்கம் வடிசாலை செயற்றிட்டம்' தொடர்பில் வரையறுத்த வடமராட்சி பனை அபிவிருத்தி கூட்டுறவு சமாசங்கள் கொத்தணியுடன் 2008 ஏப்ரல் 10 இல் கைச்சாத்திடப்பட்டிருந்த குத்தகை உடன்படிக்கையில் பிரகாரம், அது தொடர்பில் செலுத்த வேண்டியவைகள் மற்றும் பெற வேண்டியவைகள் கடந்த நான்கு ஆண்டுகளுக்கு மேலாக சபையினால் கணக்குகளுக்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை. குத்தகைச் சொத்துக்களின் விபரங்களும் கணக்காய்வுக்கு கிடைத்திருக்கவில்லை. வரை கொத்தணியிடமிருந்து கிடைக்கப் பெற்ற தகவல்களின் படி 2011 திசெம்பர் 31 இல் இருந்தவாறான செலுத்த வேண்டியவைகளும் பெற வேண்டியவைகளும் கீழே தரப்படுகின்றன.

| | |
|---|---|
| சபைக்கு செலுத்த வேண்டியவைகள் | ரூபா 7,438,358 |
| சபையிடமிருந்து பெற வேண்டியவைகள் | ரூபா 14,540,603 |

2008 மே தொடக்கம் 2009 திசெம்பர் வரையான காலப்பகுதிக்கான உரிமை மூலதனப்பங்கு மற்றும் குத்தகை வாடகையாக ரூபா 426,024 மட்டுமே 2011 வரை பெறப்பட்டிருந்ததுடன் உடன்படிக்கையின் பிரகாரம் இறைக் கட்டணத்தையும் குத்தகை வாடகையையும் அறவிடுவதற்குரிய நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**2.2.4 கணக்காய்விற்கான சான்றின்மை**

---

உறுதிப்படுத்தல்கள், நிலையான சொத்துக்கள் பதிவேடு, பௌதீக மெய்மையாய்வு அறிக்கைகள், கணனிகள் மற்றும் துணைச் சாதனங்களுக்கான பதிவேடுகள் நாளாந்த வாகன ஓட்ட அட்டவணைகள், சம்பவக் குறிப்புப் புத்தகங்கள் போன்றன கிடைக்காமை காரணமாக ரூபா 31,111,273 கூட்டு மொத்தத் தொகையான கணக்குகளிலுள்ள பத்து விடயங்களை கணக்காய்வில் திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியவில்லை.

**2.2.5 சட்டங்கள் விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

---

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

**(அ) அதிகாரச் சட்டங்கள்**

---

i. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவு

ii. 1983 இன் 12 ஆம் இலக்க பணிக்கொடைக் கொடுப்பனவுகள் அதிகாரச் சட்டம்

**(ஆ) நிதிப்பிரமாணங்கள்**

---

இலக்கங்கள் 371(2)(பீ), 751(1), 850(i), 1644 மற்றும் 1646

**(இ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை**

---

i. viii ஆம் அத்தியாயத்தின் 03 மற்றும் 10 ஆம் பிரிவுகள்

ii. xii ஆம் அத்தியாயத்தின் 05 ஆம் பிரிவு

**(ஈ) கொள்வனவு வழிகாட்டிகள் - 2006**

---

i. 05 ஆம் அத்தியாயத்தின் 5.3.5 ஆம் பிரிவு

ii. 02 ஆம் அத்தியாயத்தின் 2.6.1 ஆம் பிரிவு

iii. 08 ஆம் அத்தியாயத்தின் 8.13.3 ஆம் பிரிவு

(உ) **சுற்றறிக்கைகள்**

i. 2006 மார்ச் 24 ஆம் திகதிய 28 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கை

ii. நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் 1996 ஏப்ரல் 20 ஆந் திகதிய எம்பி/06/1/96 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 2.4.1 ஆம் பந்தி

## 3. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் படி, மீளாய்வாண்டிற்கான சபையின் செயற்பாடுகளிலிருந்தான நிதி விளைவுகள் மீண்டெழும் செலவினத்திற்கான ரூபா 55,000,000 அரசாங்க மானியங்களைக் கணக்கிலெடுத்த பின்னர் ரூபா 3,145,965 தேறிய நட்டமாக இருந்ததுடன் இதனோடு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான ரூபா 53,500,000 மீண்டெழும் செலவினங்களுக்கான அரசாங்கா மானியத்தினைக் கணக்கிலெடுத்த பின்னர் ரூபா 14,415,133 ஆன தேறிய நட்டமானமையால் நிதி விளைவுகளில் ரூபா 11,269,168 ஆல் முன்னேற்றத்தைச் சுட்டிக்காட்டியது. ஆளணி வேதனாதிகள் ரூபா 10,058,129 ஆல் குறைவடைந்திருந்தமையும் அரசாங்க மானியங்கள் ரூபா 1,500,000 ஆல் அதிகரித்திருந்தமையுமே இம் முன்னேற்றத்திற்குப் பங்களித்திருந்தன.

### 3.2 நிதி முகாமைத்துவம்

(i) கொழும்பிலுள்ள கட்டடத்தின் ஒரு பகுதி தனியார் ஹோட்டல் ஒன்றிற்கும் தனியார் கடை ஒன்றிற்கும் வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தது. தனியார் ஹோட்டல் மற்றும் தனியார் கடைக்கான மின்சாரம் மற்றும் நீர்க் கட்டணங்கள் முறையே ரூபா 412,052 மற்றும் ரூபா 30,726 சபை நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தன. இக் கட்டணங்களை அறவிடுவதற்கான ஏற்பாடுகள் தனியார் ஹோட்டல் மற்றும் தனியார் கடையுடன் கைச்சாத்திட்ட உடன்படிக்கைகளில் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை.

(ii) கொழும்பு அலுவலகக் கட்டடத்தின் 3 ஆம் மாடிக்கான வாடகையாக ரூபா 4,983,552 தொகை செலுத்தப்பட்டிருந்தபோதிலும் கடந்த 03 ஆண்டுகளாக சபையின் நோக்கத்திற்காக இது பயன்படுத்திக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(iii) சபையின் நிர்வாகக் கிரயத்திற்காக மீளாய்வாண்டில் ரூபா 70,697,859 செலவழிக்கப்பட்டிருந்த போதிலும் விற்பனைப்புரள்வு ரூபா 19,161,364 மாத்திரமேயாகும். ஆண்டு முழுவதும் சபையின் நடவடிக்கைகள் வினைத்திறனாகவும் பயனுறுதியாகவும் முன்னேடுக்கப்பட்டிராமை அவதானிக்கப்பட்டது.

## 3.3 நிதியங்களின் குறைபயன்பாடு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மீளாய்வாண்டுக்கான மொத்தச் செலவினம் ரூபா 85,540,605 இல் மொத்தச் செலவினத்தில் 53% இனைப் பிரதிநிதித்துவப்படுத்தியிருந்தன் ரூபா 45,595,180 ஆளணி வேதனாதிகள் மீதான செலவினமாயிருந்தது.

(ii) சபையின் பிரதான குறிக்கோளான பனைக் கைத்தொழிலையும் பனை வளங்களையும் அபிவிருத்தி செய்தலுக்காக ரூபா 21,001,743 கூட்டு மொத்தத்தொகையான செலவும் ஏற்பட்டிருந்தது. இது மீளாய்வாண்டிற்கான மொத்தச் செலவினத்தில் 24% இனை மாத்திரம் பிரதிநிதித்துப்படுத்துகிறது.

## 3.4 செயற்பாட்டு மீளாய்வு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மீளாய்வாண்டில் விதை நடுகைக்காக ரூபா 1,889,901 தொகை ஏற்பட்டிருந்தது. எவ்வாறாயினும், கொள்வனவு செய்யப்பட்ட, நடுகை செய்யப்பட்ட மற்றும் பாடசாலைகளுக்கும் வேறு பல்வேறு அமைவிடங்களுக்கும் விநியோகிக்கப்பட்ட விதைகளின் எண்ணிக்கையினை மதிப்பிடுவதற்கான எவ்வித செயன்முன்னேற்ற அறிக்கையோ அல்லது புள்ளிவிபரத் தகவல்களோ இருக்கவில்லை.

(ii) கீழே கொடுக்கப்பட்டுள்ள விபரங்களின் பிரகாரம், சபையினது மாதிரிப் பண்ணைகள் முன்னைய ஆண்டிற்கான ரூபா 299,348 ஆன மொத்த நட்டத்துடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் மூன்று மாதிரிப் பண்ணைகள் ரூபா 545,922 மொத்த நட்டத்தில் இயங்கி வந்திருந்தது.

| மாதிரிப் பண்ணையின் பெயர் | மொத்த இலாபம் / (நட்டம்) ரூபா |
| --- | --- |
| குடத்தனை | (104,875) |
| மாமுனை | (270,197) |
| புளியங்குளம் | (170,850) |
| | **(545,922)** |

### 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

i. ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தினால் அன்பளிப்புச் செய்யப்பட்டிருந்த நிலையான சொத்துக்கள் மற்றும் ஆய்வுகூட உபகரணங்களின் பெறுமதிகள் மதிப்பிடப்பட்டுக் கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. இச் சொத்துக்கள் கடந்த பன்னிரண்டு ஆண்டுகளாகப் பயன்பாடற்ற நிலையில் வைத்திருக்கக்கப்பட்டிருந்தன.

ii. ஒரு நீரிறைக்கும் இயந்திரம், மின்சார மோட்டார், ஒன்பது தட்டச்சுப் பொறிகள், இரண்டு அரைக்கும் இயந்திரங்கள், ஐந்து உணவு பதப்படுத்துகை அலகுகள் மற்றும் ஒரு பாதுகாப்பு மானி இயந்திரம் என்பன ஐந்து வருட காலத்திற்கு மேலாக யாழ்ப்பாண பிரதான களஞ்சியத்தில் பயன்படுத்தாது வைக்கப்பட்டிருந்தன.

iii. இரு முச்சக்கர வண்டிகள் மற்றும் ஒரு கையுழவு இயந்திரம் என்பன முறையே ரூபா 333,700, ரூபா 235,150 பெறுமதியிடப்பட்டவைகள் 01 வருடத்திலிருந்து 17 வருட காலப்பகுதியாக யாழ்ப்பாண பிரதான களஞ்சியத்தில் பயன்படுத்தாது வைக்கப்பட்டிருந்தன.

### 3.6 செயற்றிட்டங்களை அமுல்படுத்துவதில் தாமதங்கள்

காரைநகரில் கைத்தொழில் பேட்டைக்கான கட்டட நிர்மாணிப்பிற்காக 2003 மற்றும் 2004 ஆம் ஆண்டுகளில் இரண்டு ஒப்பந்தகாரர்களிற்கு ரூபா 2,500,000 தொகையான ஆயத்தப்படுத்தல் முற்பணங்கள் செலுத்தப்பட்டிருந்தன. எவ்வாறாயினும் வேலைகள் 2012 மார்ச் 31 ஆம் திகதி வரை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. இச் செயற்றிட்டத்தை தொடர்வதற்காக எவ்வித நிதிகளும் ஒதுக்கீடு செய்யப்படவில்லையென இது தொடர்பாக சபையின் தலைவரினால் எனக்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

## 3.7 வாகனங்களின் பயன்பாடு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வாகங்களின் எரிபொருள், திருத்தங்கள் மற்றும் பேணுகைக்காக ரூபா 1,803,000 தொகை செலவிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், வாகனத் திருத்தங்களைப் பதிவு செய்வதற்காக சம்பவக் குறிப்புப் புத்தகங்கள் பேணிவரப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வாகன ஓட்டப் பதிவேடுகளில் பயணத்திற்கான நோக்கம், பயணித்த நேரம், எரிபொருள் நிலைமை, எரிபொருள் தாங்கியின் கொள்ளளவு சாரதியின் முதலொப்பம் போன்றன குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

## 3.8 கணக்களிதன்மையும் நல்ல ஆளுகையும்

### (அ) உள்ளகக் கணக்காய்வு

உள்ளகக் கணக்காய்வுப் பகுதி உருவாக்கப்பட்டிருந்ததுடன் உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவர் மாத்திரமே நியமிக்கப்பட்டிருந்தார். ஆனால் மீளாய்வாண்டிற்கான உள்ளகக் கணக்காய்வுத் திட்டம் மற்றும் நிகழ்ச்சித்திட்டம் என்பன கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### (ஆ) கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக்குழு

சபையானது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவினை தாபிக்கப்பட்டிருந்ததுடன் 2011 இல் மூன்று கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களும் நடாத்தப்பட்டிருந்தன. எவ்வாறாயினும் 2005 ஜூலை 01 ஆம் திகதிய பீஈடீ/31 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் ஆண்டொன்றுக்கு ஆகக் குறைந்தது நான்கு கூட்டங்கள் நடாத்தப்படல் வேண்டும்.

### (இ) கொள்வனவுத்திட்டம்

அமைச்சின் செயலாளர் கொள்வனவுக்குழுவை நியமிக்காதிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கொள்வனவுத்திட்டமும் முறைப்படி தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) **ஆட்சேர்ப்புக்களும் பதவியுயர்வுகளும்**

ஒவ்வோர் பதவிக்குமுரிய ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வுத் திட்டங்கள் சம்பளங்கள் மற்றும் நிர்ணய ஆணைக்குழுவால் அனுமதிக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) **பாதீட்டுக் கட்டுப்பாடு**

மீளாய்வாண்டுக்காகப் பாதீடு செய்யப்பட்ட மற்றும் உண்மையான வருமானங்கள், செலவினங்களுக்கிடையில் குறிப்பிடத்தக்களவு முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடானது செயற்றிறனான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாகப் பயன்படுத்திக் கொள்ளப்பட்டிருக்கவில்லை என்பதைச் சுட்டிக்காட்டுகிறது.

(ஊ) **ஆண்டறிக்கையினை சமர்ப்பித்தல்**

நிதி அதிகாரச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவின் பிரகாரம் 2010 ஆம் ஆண்டுக்கான ஆண்டறிக்கையானது 2012 மே 31 ஆம் திகதிவரை பாராளுமன்றத்தில் சமர்பிக்கப்பட்டிருக்கவில்லை.

1.0 **முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட முறைமைகளினதும் கட்டுப்பாடுகளினதும் குறைபாடுகள் நிதி அதிகாரச் சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரமான எனது விரிவான அறிக்கையின் மூலம் சபையின் தலைவரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்தன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகிறது.

(அ) மனித வள முகாமைத்துவம்
(ஆ) நிதியங்களின் பயன்படுத்துகை
(இ) கணக்கீடு
(ஈ) பாதீடு
(உ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(ஊ) வாகனங்களின் பாவணை

ஒப்பம்: எச்.ஏ.எஸ்.ஸமரவீர

கணக்காய்வாளர் தலைமை அதிபதி